விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 தை 14 புதன்கிழமை (27.01.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 39

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

RAMCO

# தபால் மூல வாக்களிப்பு முடிவுகளில் மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில்!

## யாழ்ப்பாணத்தில் பொன்சேகாவுக்கு அதிக வாக்கு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் இன்று அதிகாலைவரை வெளியான தபால் மூல வாக்களிப்பு முடிவுகளின்படி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் உள்ளார். அறிவிக்கப்பட்ட 11 இடங்களுக்கான தபால் மூல வாக்களிப்பில் அவர் அதிகப்படியாக முன்னிலையில் உள்ளார். *(16 ஆம் பக்கம் பார்க்க)*

## இராணுவம் பெண் போராளிகளை சுடும் வீடியோக் காட்சி வெளியீடு

### இந்தியத் தொலைக்காட்சியில் பரபரப்பு

(புதுடில்லி)

வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போரின் போது விடுதலைப்புலிகளின் பெண் போராளிகளை இராணுவத்தினர் சுட்டுக் கொல்வது போன்ற புதிய ஒளிப் பதிவு ஒன்று வெளியாகியுள்ளது என ஹெட்லைன்ஸ் ருடே என்னும் வட இந்தியத் தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

பெயர் குறிப்பிடாதவர்களால் இந்த ஒளிப் பதிவு தமக்குக் *(02 ஆம் பக்கம் பார்க்க)*

## வாக்குச் சாவடிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் விஜயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் 6-வது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக நாடு முழுவதும் நேற்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் யாழ். மாவட்டத்தின் பல்வேறு வாக்களிப்பு நிலையங்களில் மக்களின் வாக்களிப்பைக் கண்டறிவதற்காக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரடியாக வாக்குச் சாவடிகளுக்கு விஜயம் மேற்கொண்டார். *(02 ஆம் பக்கம் பார்க்க)*

## யாழில் தொடர் குண்டுத் தாக்குதல்கள் பீதியில் மக்கள் நேற்றுத் திண்டாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பரவலாக பல பிரதேசங்களில் குண்டுவெடிப்புகள் இடம்பெற்றன. மக்களை வாக்களிப்பில் இருந்து தடுப்பதற்காகவே இந்தக் குண்டு வெடிப்புகள் நிகழ்த் தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. அதி காலை தொடக்கம் இத் தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

நவாலி, மானிப்பாய் பகுதிகளில் 8 குண்டுத்தாக்குதல்களும் நல்லூர் பிரதேசத்தில் 4 குண்டுத் தாக்குதல்களும் கோண்டாவில் பிரதேசத்தில் ஒரு தாக்குதலும் நிகழ்த்தப்பட்டுள்ளதாக பொலிஸ் மற்றும் பிரதேச தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை வல்வெட்டித்துறை மற்றும் உப்புவெளிப் பிரதேசங்களில் இந்தக் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதை இராணுவப் பேச்சாளர் *(16 ஆம் பக்கம் பார்க்க)*

## வாக்காளர் டாப்பில் பெயரில்லாததால் சரத் பொன்சேகா வாக்களிக்கவில்லை!

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்காகத் தாம் விண்ணப்பித்திருந்த போதிலும் தனது பெயர் 2008 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருக்கவில்லை எனவும் இதனால் தனக்கு வாக்களிக்க முடியாது போனதாகவும் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று அவர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இதனைக் கூறியுள்ளார். *(15ஆம் பக்கம் பார்க்க)*

## பொன்சேகாவுக்கு எதிராக அரசு சட்ட நடவடிக்கை!

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்காத எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் சரத் பொன்சேகாவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக அரசு அறிவித்துள்ளது.

நேற்றுக் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் பேசுகையில் வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு *(16 ஆம் பக்கம் பார்க்க)*

## யாழ்ப்பாணத்தில் 23 வீத வாக்குப் பதிவு நாடளாவிய ரீதியில் 70 வீதம் பதிவு!

(கொழும்பு)

இலங்கையின் 6-வது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காகத் தேர்தலில் வாக்கெடுப்புக்கள் இலங்கை நேரப்படி நேற்று மாலை 4 மணிக்கு முடிபடைந்துள்ளது.

காலை 7 மணிக்கு ஆரம்பமாகிய தேர்தலில் நாடளாவிய ரீதியில் பெருமளவிலான மக்கள் வாக்களிக்க ஆர்வம் காட்டியிருந்ததாக மாவட்டத் தெரிவத்தாட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

11 ஆயிரத்து 98 வாக்குச் சாவடிகளில் வாக்கெடுப்புக்கள் இடம்பெற்றன. அதே வேளை தபால் மூல வாக்குகளை எண்ணும் பணிகள் 4.30 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டது.


ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்கு எண்ணும் பணிகள் 888 மையங்களில் நடைபெறுகின்றன. 2 *(16 ஆம் பக்கம் பார்க்க)*

## சரத் பொன்சேகா எச்சரித்தார்?

(கொழும்பு)


நேற்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது கருணாவையும் பிள்ளையானையும் தொலைபேசினூடாக சரத் பொன்சேகா எச்சரித்துள்ளதாக அங்கிருந்து தகவல்கள் கிடைத்துள்ளன.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, பிள்ளையானுக்கும் கருணாவுக்கும் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்திய சரத் பொன்சேகா நடை *(16 ஆம் பக்கம் பார்க்க)*



**நேற்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ, மாவை சேனாதிராஜா ஆகியோர் வாக்களிப்பதையும் ஐ.தே.கவின் திஸ்ஸ அத்தநாயக்க வாக்களிக்கச் செல்வதையும் படங்களில் காணலாம்.**

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்


யாழ்ப்பாணத்தில் நேற்றுப் பரவலாக மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்களில் சேதமடைந்த இடங்களையும், பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்வதையும் படங்களில் காணலாம்.

# லங்கா ஈ நியூஸின் செயற்பாடுகள் கொழும்பில் அரசினால் முடக்கம்

## தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு

(கொழும்பு)

கொழும்பில் இருந்து தமது ஊடகத்தை செயல்படுத்த முடியாதவாறு தொலைதொடர்புத்துறை தடையை ஏற்படுத்தியுள்ளதாக இணையத்தள ஊடகமான லங்கா ஈ நியூஸின் ஆசிரியர்கள் தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இணையத்தள ஊடகமாக தமது ஊடகத்தில் செய்திகளை வெளியிட முடியாதவாறு அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இலங்கை தொலைத்தொடர்பு நிறுவனம் தடையை ஏற்படுத்தியுள்ளதாக அந்த இணையத்தளத்தை சேர்ந்த இரு ஆசிரியர்கள் தேர்தல் ஆணையாளரிடம் தெரிவித்துள்ளனர்.

நேற்று காலை 11.20 மணியில் இருந்து தமது இணையத்தளம் செயலிழந்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த இணையத்தளத்தை சேர்ந்த அரசியல் ஆய்வாளர் பரகீத் எக்நலிகொட கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் காணாமல் போயிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. அவரை கண்டறியும் முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன.

எக்நலிகொட கடத்தப்பட்ட தினம் வெள்ளை வான் ஒன்று லங்கா ஈ நியூஸ் அலுவலகத்திற்கு முன்னால் தரித்து நின்றதாக சக ஊடகவியலாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-5)

# வாக்களிப்பை தடுப்பதற்காக யாழில் குண்டுத் தாக்குதல்கள்

## சுரேஷ் எம்.பி. குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஜனாதிபதி தேர்தல் தினமான நேற்று அதிகாலையில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல்கள் அரச தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ்பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறை, காரைநகர் ஆகிய டிப்போக்களைச் சேர்ந்த 25 பஸ்களை படையினர் தமது தேவைக்கு எனக் கூறி எடுத்துச் சென்றனர்.

இவ்வாறான செயல்களில் பொதுமக்கள் வாக்களிப்புக்கு செல்வதிலும், குண்டுத் தாக்குதல் காரணமாக மக்கள் ஒரு பய உணர்வும் ஏற்பட்டு வாக்களிப்புக்குச் செல்லாமல் தடுக்கலாம் என்பதே இதன் நோக்கமாக இருக்கலாம் அல்லது மக்கள் வாக்களிப்புக்கு செல்வதை குறைக்கலாம் என்ற நோக்கத்துடனும் இவ்வாறு செயற்பட்டிருக்கலாம் என்றார்.

அதேநேரம் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி சென்று மக்கள் வாக்களிப்பதை தடுக்கும் நோக்குடன் இவ்வாறான சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் எனநான் கருதுகின்றேன்.

படையினர் பஸ்களை எடுத்துக் சென்ற சம்பவம் தொடர்பாக நான் யாழ். அரச அதிபருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, இது தொடர்பில் தமக்கும் எதுவும் தெரியாது எனவும் கூறினார்.

இதேவேளை நல்லூர், கோண்டாவில், வியாபாரிமூலை ஆகிய பகுதிகளில் இக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன. கைக்குண்டுகளினாலே இக் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இது பொது மக்களை வாக்களிக்க விடாமல் தடுப்பது அல்லது மந்தமடையச் செய்வது தான் என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ச-5)

## வாக்காளர் சாவடிக்கு...

முதலாவதாக யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையத்திற்கும் அதனைத் தொடர்ந்து வேம்படி மற்றும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரிகளின் வாக்குச் சாவடிகளுக்கும் சென்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்கு தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் மற்றும் தேர்தல் முகவர்களால் மக்களின் சுமுகமான வாக்களிப்புக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளைப் பார்வையிட்டதுடன் மக்களின் வாக்களிப்பு நடவடிக்கைகளையும் கவனத்தில் கொண்டார்.

இதன் பின்னர் கொழும்புத்துறை கிழக்கு, அரியாலை, இருபாலை ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையங்களுக்கும் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம், புத்தூர் மெதடிஸ் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க பாடசாலை, வட இந்து மகளிர் கல்லூரி, கரவெட்டி திரு இருதயக் கல்லூரி, வரணி மகா வித்தியாலயம், மீசாலை வீரசிங் கம் வித்தியாலயம், மல்லாகம் கனிஷ்ட வித்தி யாலயம் மற்றும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி ஆகியவற்றுக்கு சென்று பார்வையிட்டார். (ச-5)

## இராணுவம்...

கிடைத்ததாகவும் அந்தத் தொலைக்காட்சி தெரிவித்துள்ளது. அதில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பெண் போராளிகளை நிர்வாணப்படுத்தி இராணுவத்தினர் சித்திரவதை செய்வதைப் போன்ற காட்சிகள் உள்ளன என்றும் அத்தொலைக்காட்சி தெரி விக்கின்றது.

அத் தொலைக்காட்சி அவ் ஒளிப் பதிவை காட்சிக்கு இதுவரை வைக்க வில்லை என்பதும் அந்த ஒளிப் பதிவை வெளியிடாமலேயே அந்த ஒளிப் பதிவு குறித்து இராணுவத்திடம் கேட்டது சந்தேகங்களை எழுப்பியுள்ளது என சர்வதேச செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

எப்போதும்போல் இராணுவம் இதனை மறுத்துள்ளது. இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடப்பதால் அந்த ஒளிப் பதிவு இந்திய அரசால் நெருக்கடி கொடுத்து வெளியிடப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்ற பலத்த சந்தேகங்களை எழுப்பியுள்ளது. (ச-5)

# பூஜை வழிபாட்டில் கலந்து கொள்ள டில்லிக்குச் சென்ற மகிந்த ராஜபக்ஷ

மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா சென்று புதுடில்லியில் உள்ள இந்துக் கோவிலில் பூஜையில் கலந்து கொண்டுவிட்டு நாடு திரும்பினார் என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தத் தேர்தல் தனக்குச் சாதகமான இருக்கப் போவதில்லை என உணர்ந்த மகிந்த ராஜபக்ஷ அது தொடர்பாக டில்லித் தலைமைகளுடன் உரையாடவே உடனடியாக டில்லி புறப்பட்டுள்ளதாக ஒரு தகவல் கூறுகிறது.

சரத் பொன்சேகா ஜனாதிபதியாக வருவதை தடுக்கும் முகமாக இந்திய இராணுவத்தைத் தலையீடு செய்யக் கோருவதற்கான விஜயமாக இது இருக்கலாம் எனவும் நம்பப்படுவதாகவும்,

ஆனால் மக்களுடைய ஜனநாயக ரீதியிலான தீர்ப்புக்கு எதிராக இந்தியா எவ் வாறு இராணுவத் தலையீட்டினை மேற்கொள்ளும் என்பது புதிராகவுள்ளது என்றும் கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலக வட்டாரத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, மேற்படி தகவல்களை நிராகரித்த அவ்வட்டாரங்கள் மகிந்த டில்லி செல்வது டில்லியிலுள்ள இந்துக் கோவில் ஒன்றில் விசேட பூஜை ஒன்றில் கலந்து கொள்வதற்காகவே என்று தெரிவித்தன.

எவ்வாறாயினும், இந்திய பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய மகிந்த ராஜபக்ஷ தனது சொந்த ஊரான மெதமுலனவில் நேற்றுக் காலை வாக்களிப்பிலும் கலந்துகொண்டார். (ச-5)


வெள்ளிவிழா ஆண்டில் வீறுநடையுடன்..

25

**கலாலயா**

பயிற்சியகம்

1985 - 2010

பெருமாள் கோயிலுக்கு அண்மையில், யாழ்ப்பாணம்.

**மகளிருக்கான 3 மாத சான்றிதழ் பயிற்சிகள்**

- **கேக் ஐசிங்,** Sugar Flowers, Fondant, மற்றும் ஏனைய ஐசிங்வகைகள்.
- **உணவு தயாரித்தல்** (கேக் வகைகள், பீஸா, Pastry, சிற்றுண்டிகள், ஈற்றுணவுகள்)
- **பப்றிக் வர்ணம் தீட்டுதல் :** துணிகளில், கண்ணாடியில், சேலையில் (Saree Painting)
- **கை வேலை :** கம்பளி நூல், Soft Toys, கழிவுத் துணிகளில் வேலைப்பாடுகள்.
- **பூ வேலை :** கடதாசி, துணி, Paper Ribbon, ஜெலற்றின், கபாயா மலர்கள் செய்தல்
- Saree Work : சேலையில் முத்துக்கள், சுயிக்கின்ஸ் கட்டுதல், Net Work செய்தல்
- **கூந்தல் அலங்காரம் :** 50 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், வெட்டுதல், சுருட்டுதல், நிறமூட்டுதல், Perming.

☛ மேற்படி வகுப்புக்கள் வார நாட்களில் மட்டும் நடைபெறும்.

**ஒரு மாதகால அழகுக் கலை சான்றிதழ் பயிற்சிகள்**

Facials (முக அழகுக்கலைகள்) மணப்பெண் அலங்காரங்கள், சேலை உடுத்தும் முறைகள், கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகுபடுத்துதல் (Manicure, Pedicure). மற்றும் 50 கூந்தல் அலங்காரங்கள், முடி அயன் செய்தல், வெட்டுதல், சுருட்டுதல், நிறமூட்டுதல், Perming. ☛ வாரநாள்/சனி ஞாயிறு இரு பிரிவுகள்.

**6 மாத உடை தயாரித்தல்** (தையற் கலை) சான்றிதழ் **பயிற்சிகள்**

(அடிப்படைத்தையலுடன் குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான ஆடைகள், சாரிபிளவ்ஸ் தைத்தல்) ☛ வாரநாள்/சனி ஞாயிறு இரு பிரிவுகள்.

- தையல் தெரிந்தவர்களுக்கான **இருவாரகால** சான்றிதழ் அற்ற சாறி

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம் :** 30-01-2010 - சனிக்கிழமை
01-02-2010 - திங்கட்கிழமை

*மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.*

**Rooms Available**

[அறைகள் வாடகைக்கு]

*AC, Non AC அறைகள் Booking செய்து கொள்ள முடியும்.*

தொடர்புகளுக்கு:-
முகாமையாளர்
R.M.S லிமிட்டட்
121 A, பற்றிக்ஸ் றோட், யாழ்ப்பாணம்.
T.P.:0779496985
(டேவிட் பீரிஸ் முன்பாக)

(C-4343)

**முகவர் (Agent) தேவை**

ஸ்ரீ லங்காவிலிருக்கும் பிரபல உப்பு நிறுவனத்திற்கு முகவர் தேவை. அயடின் கலந்த சுகாதாரமான உப்பு தூள் வகைகள், கட்டி உப்பு வகைகளை யாழ்.மாவட்டத்தில் விநியோகிப்பதற்கு வணிக அனுபவமும், வாகன வசதியும் உள்ள உப்பு முதலீட்டாளர் தேவை.

தொடர்புக்கு:-
Turney பிஸ்கட்
இல.24/A,இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 021 320 7009
077 460 9620

(C-4334)

# இன்று ஒரு தகவல்

## பலசாலி யார்?

மனிதனுக்கு எத்தனை வயது– என்று கேட்டார் ஒருவர்.

"மூன்று இலட்சம்" என்றார் இன்னொருவர்.

கேட்டவருக்கு மயக்கம் வருவது போல் இருந்தது.

"என்ன செல்லிறீங்க?" என்று கேட்டார் ஆச்சரியமாக! "நான் சரியாகத்தான் சொல்கிறேன். இந்த உலகத்தில் மனிதன் தோன்றி மூன்று இலட்சம் ஆண்டுகள் ஆகின்றன. ஆனாலும் கடந்த ஆறாயிரம் ஆண்டுகளில் தான் மனித நாகரிகம் தோன்றியது"

" ஓ .... அப்படியானால் மனிதனின் வயது மூன்று இலட்ச ஆண்டுகள். மனித நாகரிகத்தின் வயது ஆறாயிரம் ஆண்டுகள். அப்படித்தானே!"

"ஆமாம்! அது இருக்கட்டும் கடவுள் இந்த பூமியைப் படைத்தது சம்பந்தமாக ஒரு கதை உண்டு. தெரியுமா?"

"சொல்லுங்க.... தெரிந்து கொள்கிறேன்"

கடவுள் ஒரு நாள் சாவகாசமாக உட்கார்ந்து இந்த பூமி உருண்டையை உருவாக்கினாராம். அது அப்படியும் இப்படியும் அசைய ஆரம்பித்ததாம். அதிர்வு வேறு இருந்ததாம்.

அது அசையாமல் இருக்க வேண்டும். இதில் கனமான ஒரு பொருள் எதையாவது வைத்தால் தான் இது அசையாமல் உறுதியாக நிற்கும். என்ன செய்யலாம்?

உடனே பெரிய பெரிய மலைகளை உருவாக்கி அவற்றை ஆங்காங்கே நிறுத்தினார். உடனே அது உறுதியாக நின்றது. இதைப் பார்த்து விட்டு சிலர் கடவுளிடம் வந்தார்களாம்.

"கடவுளே எங்களுக்கு ஒரு சந்தேகம்!" என்றார்களாம்.

"உங்களுக்கு என்ன சந்தேகம்?"

"மலைகளை விட பலமாக எதையாவது உருவாக்கியிருக்கிறீர்களா?"

"ஓ... கடினமான இரும்பை உருவாக்கியிருக்கிறேனே. இரும்பு மலையையே உடைக்கும்"

"இரும்பை விட பலம் பொருந்திய ஏதாவது உண்டா?"

"நெருப்பைப் படைத்திருக்கிறேனே .... இந்த நெருப்பு இரும்பையே உருக்கி விடும்"

"நெருப்பை விட சக்தி உள்ளது ஏதாவது உண்டா?"

"உண்டு. அது தான் நீர். தண்ணீர் நெருப்பை அணைத்து விடும்"

"நீரை விட ஆற்றல் மிக்கது ஏதாவது உண்டா"

"எங்கும் நிறைந்திருக்கும் காற்று, நீரைவிட ஆற்றல் மிக்கது. அது கடலையே கொந்தளிக்கச் செய்து விடும்"

"அதை விடவும் சக்தி வாய்ந்த எதையாவது படைத்திருக்கிறீர்களா?"

"படைத்திருக்கிறேன் எல்லாவற்றையும் விட பலசாலியான மனிதன் ஒருவனை நான் படைத்திருக்கிறேன்"

"யார் அவன்?"

"இடது கைக்குத் தெரியாமல் வலது கையால் எவன் தானம் செய்கிறானோ... அவன் தான் அது" கேட்டவர்கள் திகைத்துப் போனார்கள்.

"எல்லாவற்றையும் விட பலசாலி அவன்" என்று சொல்லி விட்டு கடவுள் மறைந்தது விட்டாராம்.

இப்படி ஒரு கதையை பெரியவர்கள் சொல்வதுண்டு.

கலைவாணர் என்.எஸ்.கிருஸ்ணன் மிகவும் கஷ்டத்தில் இருந்தாராம்.

அந்த நேரம் பார்த்து ஒருத்தர் அவர் முன் பரிதாபமாக வந்து நின்றாராம் "அண்ணே! ஏதாவது உதவி செய்யுங்கள்" என்பது போல் இருந்தது அவரது முகம்.

அந்த நேரம் கலைவாணரின் கையில் பணம் எதுவும் இருக்கவில்லை. அங்கும் இங்கும் திரும்பிப்பார்த்தார். இடது பக்கத்தில் ஒரு வெள்ளிக்கிண்ணம் இருந்தது. உடனே அதை எடுத்து வந்தவரிடம் கொடுத்து "எடுத்துக்கொண்டு போ" என்றார்.

வந்தவர் "அண்ணே... கொடுக்கிறதை வலது கையால் கொடுங்க" என்றார்.

அதற்கு கலைவாணர்,

"இடது கையில் இருந்து இந்தக் கிண்ணம் வலது கைக்கு மாறி வருவதற்குள் மனசு மாறினாலும் மாறி விடும். அதற்குள் வாங்கிக்கொள்.... இந்தா!" என்றாராம்.

கடவுள் குறிப்பிட்ட அந்த பலசாலியான மனிதர் யார் என்று கேட்டால் அதற்கு உதாரணம் கலைவாணர்.

ஆனால் இந்தக் காலத்தில் மனிதர்களுடைய அபிப்பிராயம் எல்லாம் வேறு மாதிரி இருக்கிறது. இந்தக் காலத்தில் ஒரு பெரியவரைப்பார்த்து, "உலகத்தில் மிகவும் உறுதியான மனிதன் யார்?" என்று கேட்டார்களாம். இதற்கு அவர் சொன்ன பதில்,

'ஒரு தட்டு நிறைய வறுத்த நிலக்கடலையைக் கொண்டுவந்து வையுங்கள்'

ஒரு கடலைய்யை எடுத்து உடைத்து வாயில் போட்டு விட்டு .... அடுத்த கடலையை எவன் தொடாமல் இருக்கிறானோ அவன் தான் அது!" என்றாராம்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# மட்டக்களப்பு, திருகோணமலை அம்பாறையில் வாக்களிப்புகள்

மட்டக்களப்பு மாவட்டம் இழுவான் கரைப்பகுதியில் வாக்களிப்பு சுறுசுறுப்பாக நடைபெற்றதாக அங்கிருந்துவரும்செய்திகள்தெரிவித்தன.

மேலும் படுவான் கரை பிரதேசத்தில் முற்பகலில் மக்கள்ஆர்வம்காட்டவில்லை என்றும் பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக வாக்களிப்பு நிலையங்களுக்கு சமூகமளித்தாகவும் தெரிவிக்கப்பட் டன.

திருகோணமலைப் பகுதியில் இரா.சம்பந்தன் தனது வாக்கினை நேற்று முற்பகல் வாக்களிப்பு நிலையம் சென்று செலுத்தினர். திருகோணமலை மாவட்டத்திலும் பிற்பகலை அண்மித்த வேளையில் மக்கள் வாக்களிக்கத் தொடங்கியதாக கூறப்படுகின்றது. அம்பாறை மாவட்டத்தில் எந்தவிதமான அசம்பாவிதங்களுமின்றி சுமூகமாக வாக்களிப்பு இடம் பெற்றதாகவும் கூறப்படுகின்றது.(2-6)

# இம்முறை தேர்தலில் மக்கள் அதிக ஆர்வம் காட்டினர்

## கண்டி உதவி தேர்தல் ஆணையாளர்

(கொழும்பு)

கண்டி மாவட்டத்தில் இம்முறை தேர்தல் மிகவும் அமைதியான சூழ்நிலையில் நடைபெற்றதாகவும் இதேவேளை ஏனைய காலங்களில் நடைபெற்ற தேர்தல்களிலும் பார்க்க இம்முறை வாக்காளர்கள் அதிகம் ஆர்வமுடன் வாக்களித்ததாகவும் காலை 6.30 மணியில் இருந்து வாக்குச் சாவடியில் மக்கள் நீண்டவரிசையில் நின்று வாக்களித்ததாகவும் கண்டி மாவட்டத்தில் 653 வாக்குச் சாவடிகளில் இந்த வாக்களிப்பு நடவடிக்கைகள் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக கண்டி மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் கருத்துத் தெரிவிக்கையில்.

சில வாக்குச் சாவடிகளில் சிறு அசம்பாவிதங்கள் நடைபெற்றதாகவும் தெரிவித்தார்.

எனினும் இது பற்றி இதுவரை தமக்கு எவ்வித முறைப்பாடும் கிடைக்கவில்லை எனவும் பாதுகாப்பு நடவடிக்கைகள் சிறப்பான முறையில் இடம்பெற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

(2-4)

# இலங்கை மு.கா.ஆதரவாளரின் வீட்டின் மீது கைக்குண்டு தாக்குதல்

(கொழும்பு)

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த மடவளையில் நேற்று முன்தினம் நள்ளிரவு கைக்குண்டொன்று வீசப்பட்டுள்ளது. மடவளை தெல்தெனிய வீதியிலுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளரான எம்.எஸ்.எம்.ரிஸ்மி என்பவரது வீட்டிற்கே இக்கைக்குண்டு வீசப்பட்டுள்ளது.

சம்பவத்தில் அவரது வீட்டிற்கு சிறிது சேதம் ஏற்பட்டுள்ளது. வீசப்பட்டது பாரிய குண்டாயினும் உயிர்ச் சேதம் ஏற்படவில்லை. சம்பவம் நடந்த சமயம் வீட்டு உரிமையாளரான ரிஸ்மி அலுவல் காரணமாக வெளியே இருந்துள்ளார். இது குறித்து வத்துகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (2-6)



சிதம்பரத்தில் அண்மையில் நடைபெற்ற திருவா திரை மகோற்சவத்தில் யாழ். சைவபரிபாலன சபையின் தலைவர் ஏற்பாட்டில் த.சண்முகலிங்கத்தின் தில்லைக்கூத்தன் திருமுன் திருவாசக் முற்றோதல் நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் சிதம்பரம் கோயில் ஓதுவார் சிவத்திரு எஸ். முத்துக்குமாரசுவாமி தலைமையில் இலங்கைத் திருமறை மன்றத்தின் பொருளாளர் கே.கே.கே. சிவபாலன், சிவப்பெரும்சீலர் ப.இராமநாதன் ஆகியோர் பங்குகொள்வதை படத்தில் காணலாம்.

# இராசி பலன்

27-01-2010
(தை 14 புதன்கிழமை)
துவாதசி முன்னிரவு 7.19 மணிவரை
மிருகசீரிடம் பிற்பகல் 5.56 மணிவரை
இராகுகாலம் 12.36 - 2.06 மணிவரை
சுபநேரம் 5.06 - 6.36 மணிவரை


| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், விருந்துபசாரம், நல்ல செய்தி. |
| இடபம் | விவாதம், அதிக செலவு, வேலைச் சுமை, முயற்சி தாமதம். |
| மிதுனம் | நல்ல முயற்சி, பெரியோர் மனஸ்தாபம், போசனசுகம், சிந்தனை மிகுதி. |
| கடகம் | காரிய அலைச்சல், ரோக நிலை, சுப செலவு, சயன சுகக் குறைவு. |
| சிங்கம் | எடுத்தகாரியம் கைகூடும், தொழில் மேன்மை, தேகநலன், தனதானிய சேர்க்கை. |
| கன்னி | அதிகாரம், சுப செய்தி, தன்னம்பிக்கை, முயற்சி கைகூடும். |
| துலாம் | பிதா சிந்தை, திடீர் பயணம், பணவிரயம், பித்தரோகம். |
| விருச்சிகம் | ஆரோக்கியக் குறைவு, காரிய தாமதம், போசனசுகம், திடீர் நன்மை. |
| தனுசு | குடும்ப சுகம், நல்ல செய்தி, போசன சுகம், காரிய சித்தி. |
| மகரம் | செய்தொழில் விருத்தி, சத்துரு ஜெயம், உஷ்ண நிலை, போசன சுகம். |
| கும்பம் | வியாபார நன்மை, அமைதிக் குறைவு, தனவிரயம், முயற்சி தாமதம். |
| மீனம் | ரோக பயம், எடுத்த காரியம் தாமதமாகும், நண்பர்கள் உதவி, மனச்சஞ்சலம். |

வளவன்


# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 110 | 140 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 150 | 160 | 120 |
| தக்காளி | 90 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 35 | 40 |
| கோவா | 75 | 85 | 100 |
| கரட் | 90 | 100 | 100 |
| பூசணி | 35 | 50 | 50 |
| புடோல் | 70 | 80 | 60 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 110 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 80 |
| பாகற்காய் | 200 | 240 | 140 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 60 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 150 | 160 | 140 |
| லீக்ஸ் | 70 | 80 | 100 |
| பீற்றூட் | 100 | 120 | -- |
| கறிமிளகாய் | 250 | 280 | -- |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 80 | 100 | 100 |
| கத்தரி தம்புள்ள | 100 | 110 | 120 |
| கீரை - 1 பிடி | 30 | 35 | 30 |
| தேசிக்காய் | 80 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |

# ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்புப் பதிவுகள்...
















படங்கள்:-ரம்ஷன்,ஜசிகரன்,சுதாகர்


# இலங்கை அரசியலில் இந்தியாவின் தலையீடு

01

முதலாவது உரை

இலங்கை அரசியலில் இந்தியாவின் தலையீடு தொடர்பாக 2008செப்டெம்பர் மாதம் 19ஆம் திகதி கண்டியில் இடம்பெற்ற பகிரங்க சொற்பொழிவு தொடராக பிரசுரமாகின்றது

இலங்கையின் அரசியல் இந்தியாவின் தலையீடு தொடர்பாகவே நான் இங்கு உரையாற்ற வந்துள்ளேன். நாட்டின் அரசியலில் இந்தியா எவ்வாறு தலையீடு செய்கிறது என்பதைப் பற்றியும், இதனால் நாம் எந்த நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றோம் என்பதைப் பற்றியும் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.



ஜவகர்லால் நேரு

இந்தியா சுதந்திரமடைந்த பின்னர் அது கடைப்பிடித்த வெளிநாட்டுக் கொள்கையை பற்றி நாம் ஆராய வேண்டும். விசேடமாக இந்தப் பிராந்தியத்தில், தெற்காசிய பிராந்தியத்தில் இந்தியாவின் பாத்திரம் எத்தகையது? தெற்காசியப் பிராந்தியத்தில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை எத்தகையது? சுதந்திரத்துக்குப் பின்னர், தெற்காசிய நாடுகளான பாகிஸ்தான், நேபாளம், பூட்டான், பங்களாதேசம், இலங்கை மற்றும் மாலைதீவுகள் விடயத்தில் இந்தியா எவ்வாறு நடந்துக் கொள்கின்றது.

இந்தப் பிராந்தியத்துக்கான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை எவ்வாறு அமைந்திருக்கிறது? போன்றவை பற்றி மட்டுமல்ல, இலங்கை விடயத்தில் இந்தியாவின் வெளியுறவுக்கொள்கை, இலங்கையின் பொருளாதார அரசியல் விடயங்களில் அது எத்தகைய தலையீடுகளைச் செய்கிறது என்பதைப் பற்றியும் நாம் உரையாட வேண்டும்.

ஆகவேதான் இந்த உரையாடலை ***இலங்கையின் பொருளாதாரத்தில் இந்தியாவின் தலையீடு*** எனவும் ***இந்தியாவின் வெளியுறவும் கொள்கை*** எனவும் இரண்டாகப் பிரித்துள்ளோம்.

இந்தியாவின் வெளிநாட்டுக்கொள்கை, வெளிநாட்டுக் கொள்கையின் விஸ்தரிப்பு ஆகியன பற்றி இன்று நான் உங்கள் முன் உரையாற்றவிருக்கின்றேன். அதன் பின்னர் விசேடமாக தெற்காசியா தொடர்பாகவும், இலங்கையின் பொருளாதார, அரசியல் துறைகளில் இந்தியாவின் தலையீடு தொடர்பாகவும் தோழர் ரில்வின் சில்வா உரையாற்றுவார்.

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையைப் பற்றி உரையாடவேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டமைக்கு விஸ்தரிப்பு காரணம் என்ன? கடந்த காலங்களில் குறிப்பாக 1980 களிருந்தே இந்திய தலையீட்டின் தீய விளைவுகளை நாம் அனுபவித்து வருகின்றோம். எமது இந்த வீழ்ச்சிக்குக் காரணமான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையைப் பற்றி நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். விசேடமாக இலங்கை விடயத்தில் இந்தியாவின் தலையீட்டை நாம் விளங்கிக் கொள்ளவேண்டும்.

1965இல் ம.வி.முயை ஸ்தாபிக்கும் போது தோழர் ரோஹண விஜேவீர இந்திய விஸ்தரிப்புவாதத்தைப் பற்றி முதன் முதலாகக் விளக்கினார். அப் போது தோழர் ரோஹண விஜேவீரவுக்கு எதிராக கடுமையான விமர்சனங்கள் எழுந்தன.


இந்திய விஸ்தரிப்பு வாதத்தைப் பற்றி பேச வேண்டியளவுக்கு ஒன்றுமில்லை. அதற்கான சான்றுகளும் கிடையாதென விமர்சித்தவர்கள் கூறினர்.

எனினும் அன்று தோழர் ரோஹண விஜேவீர அவர்கள் கூறியவை உண்மையென குறுகிய காலத்துக்குள்ளேயே நிரூபிக்கப்பட்டதை நாம் கண்கூடாகக் கண்டோம். இந்திய தலையீட்டின் அனைத்துக் காட்சிகளையும் இலங்கை மக்கள் கண்கூடாகவே கண்டனர். தெற்காசியப் பிராந்தியத்தில் இந்தியாவின் வெளியு றவுக் கொள்கை எவ்வாறு அமுல்படுத் தப்படுகின்றது என்பதை நாம் ஆராய வேண்டும். இந்தியா தனது இருப்புக் காக, அரசியல் ரீதியிலும் தலையீடு செய் யக்கூடிய இடம்தான்.

தெற்காசியப் பிராந்தியம், இதை விடுத்து ஐரோப்பாவிலோ, அமெரிக்காவிலோ, கிழக்காசியாவிலோ, வேறொரு நாட்டிலோ தலையீடு செய்ய முடியாது. அதற்கான சக்தி இந்தியாவிடம் இல்லை.

அதேவேளை தெற்காசிய பிராந்தியத்தில் தலையிடும் ஆற்றல் இந்தியாவுக்கு இருக்கிறது.ஏனைய நாடுகளின் இறைமையை மதிக்காமல் அந்த நாடுகளில் தலையீடு செய்வதற்கான காரணம் இது தான். இது விடயமாகத்தான் இங்கே நாங்கள் உரையாட வேண்டியிருக்கின்றது.

1980 களில் இலங்கைக்கு எதிராக இந்தியா மேற்கொண்ட தலையீடு இலங்கையின் இறைமையை பாதித்தது, இந்த பாதிப்புக்களின் அளவைக் கூட அறிய முடியாத இந்திய அடிவருடிகளும், முதுகெலும்பில்லாத தலைவர்களும் இந்நாட்டில் இருக்கின்றனர்.



ரோகன விஜயவீர

அவர்கள் இந்நாட்டின் அதிகார பீடத்திலும் இருக்கின்றனர். எனவே தான், தெற்காசியப் பிராந்தியத்துக்கான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையைப் பற்றி, விசேடமாக இலங்கையின் வெளியுறவுக் கொள்கைக்கு ஏற்படும் தாக்ககத்தைப் பற்றிய அறிவு எமக்குத் தேவைப்படுகிறது.

சுதந்திர இந்தியாவின் முதலாவது பிரதமராக இருந்த ஸ்ரீ ஜவகர்லால் நேரு, 1950களில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையொன்றை செயல்படுத்தினார். அதற்குள் நல்ல விடயங்களும் இருந்தன.

ஒன்று, ஏனைய நாடுகளில் காலனித்துவத்தை தோற்கடிப்பதற்காக வார்த்தையளவிலாவது ஒத்துழைப்பு வழங்குவது. எனவே தான் சுதந்திரத்துக்காக போராடிய நாடுகளோடு அன்றைய இந்தியா ஓரணியில் நின்றது. நிறபேதம் தலைவிரித்தாடிய தென்னாபிரிக்காவுக்கு எதிராக அணிவகுத்து நின்றது. அவ்வாறானதொரு உறுயான வெளியுறவுக் கொள்கை இந்தியாவிடம் இருந்தது.

அதேபோன்று தீய விடயங்களும் இருந் தன. சுதந்திரத்திற்குப்பின்னர் 1954 இல் இந்தியா,ஆசியாவில் பிரபலமாயிருந்த அரசியல் தலைவர்களுடன் உடன்பாட் டுக்கு வந்தது. அப்போதைய சீனப்பிரதமர் சூ என் லாய் பாண்டுங் மாநாட்டுக்கு பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்திருந்தார். அதற்கேற்ப 1954இல் பஞ்ச சீலக் கொள் கை நிறைவேற்றப்பட்டது.

சீனப் பிரதமர் சூ என்லாய் தான் பஞ்சசீலக் கொள்கையை தயாரித்திருந்தார். வித்தியாசமான சமூக முறைகள் நிலவிய நாடுகளில், விசேடமாக ஆசிய நாடுகளுக்கிடையேயான சகவாழ்வு, அமைதி மற்றும் நட்புறவை கட்டியெழுப்பும் நோக்கத்துடனேயே அதனை தயாரித்திருந்தார். ஒவ்வொரு நாடும் ஏனைய நாடுகளை ஆக்கிரமிப்பதிலிருந்து தவிர்க்கும் கொள்கையில் நிலைத்திருப்பதற்காக ஆசியாவின் மாநாடொன்றுக்கு இவ்வாறானதொரு பிரேரணையை கொண்டுவர வேண்டிய தேவை அந்த நாடுகளின் தலைவர்களுக்கு இருந்தது.

சீனப் பிரதமர் சூ என் லாய், இந்தியப் பிரதமர் ஸ்ரீ ஜவகர்வால் நேரு, பர்மாவின் பிரதமர் ஊனு, இந்தோனேசியப் பிரதமர் சுகர்ணோ போன்ற ஆசியாவின் உயர்மட்டத்திலிருந்த, அந்தந்த நாடுகளின் சுதந்திரப் போராட்டத்துக்கு தலைமை தாங்கிய, சுதந்திரம் பெற்று பிரதமர்களாக ஆகியிருந்த அந்தத் தலைவர்களினால்தான் பாண்டுங் மாநாடு கூட்டப்பட்டது.

*சீனப் பிரதமர் சூ என் லாய் அவர்களால்* தயாரிக்கப்பட்ட பிரேரணை , சூ என்லாய், ஸ்ரீ நேரு, பர்மியப் பிரதமர் ஊனு ஆகிய மூவரினதும் பிரேரணையாக பாண்டுங் மாநாட்டில் கொண்டு வரப்பட்டது.

மாநாட்டின் போது 5பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன. அந்த 5 பிரேரணைகளையும் ஒரே வாக்கியத்தில் கூறுவதாயிருந்தால், ஆக்கிரமிக்காதிருத்தல், அந்தந்த நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடாதிருத்தல், அமைதியானசகவாழ்வுக்காக பஞ்சசீலக் கொள்கையை அமுல்படுத்தல்.

அன்று இலங்கைப் பிரதமராக இருந்த சேர்.ஜோன் கொத்தலாவல அவர்களும் அந்த மாநாட்டில் கலந்து கொண்டிருந்தார். அன்று ***பாண்டுங் வீரர்*** என சேர் ஜோன் கொத்தலாவல் அழைக்கப்பட்டமை எல்லோரும் அறிந்ததே. அந்த பஞ்சசீலக் கொள்கையை நிறைவேற்றிய மண்டபத்திலிருந்தே இந்தியா பஞ்சக் சீல கொள்கையை மீறியது.

எமக்குத் தெரிந்த பழைய கதையொன்றிருக்கின்றது. இலங்கையின் பிரதமர் என்ற வகையில் சேர் ஜோன் கொத்தலாவல மாநாட்டில் உரையாற்றி விட்டு ஸ்ரீ ஜவகர்லால் நேருவுக்குப் பக்கத்திலிருந்த தனது இருக்கையில் வந்து அமர்ந்தார். ***நீங்கள் அந்த உரையை ஏன் என்னிடம் காட்டவில்லை*** என நேரு கொத்தலாவலவிடம் கேட்டார்.

சேர் ஜோன் கொத்தலாவல எப்படிப்பட்டவர் என்பது உங்களுக்குத் தெரியும். அந்தக் காலத்தில் நான் சிறுவனாக இருந்தேன். அச்சந்தர்ப்பத்தில் சேர் ஜோன் கொத்தலாவல நல்லதோரு பதிலைக் கூறியிருந்தார். சேர் ஜோன் கொத்தலாவலவுக்கு தன்மானம் இருந்தது. எதையும் நேரடியாகவே கூறக்கூடியவர். ***நீங்களும் உங்களது உரையை என்னிடம் காட்டவில்லையே*** என நேருவைப்பார்த்துக் கூறினார்.



சோமவன்ச அமரசிங்க
தலைவர் ,
மக்கள் விடுதலை முன்னணி

எம்மிடத்தில் எவ்வளவுதான் கொள்கை வேறுபாடுகள் இந்தாலும் அவருடைய விட்டுக் கொடுக்காமையை நாம் மதிக்கத்தான் வேண்டும். இன்று முதுகெலும்பு வளையும் தலைவர்களே நாட்டில் இருக்கின்றனர். சேர் ஜோன் கொத்தலாவல நாட் டின் கௌரவத்தை பிரதிநிதித்துவப்படுத் தினார்.

நேரு, கொத்தலாவல, பண்டாரநாயக்கா போன்ற தலைவர்களுக்கிடையில் வித்தியாசமிருக்கவில்லை. அவர்கள் ஒன் றாகப் படித்த, ஒன்றாக உறவாடிய, ஒரே தரத்தைச் சேர்ந்தவர்கள். இந்த சர்வதேச மாநாட்டின் பஞ்சசீலக் கொள்கைகளுக் கேற்ப ஒவ்வொருவரது உள்நாட்டு விவகா ரங்கில் யாரும் தலையிடுவதில்லை என்ற கொள்கையை நிறைவேற்றிய கையோடு நேரு கேட்கிறார்.

உரையாற்ற முன் என்னிடம் ஏன் காட்ட வில்லையே என, பஞ்சசீலக் கொள்கையை அப்போதே இந்தியா மீறி விட்டது. அந்த மண்டபத்துக்குள்ளேயே சிறிது நேரத்தில் பஞ்சசீலக் கொள்கையை மீறிய நாடு தான் இந்தியா. அவ்வாறான ஏகாதிபத்தி யவாத வெளிநாட்டுக் கொள்கை யையே இந்தியா கடைப்பிடித்தது.

இந்தியாவின் இந்த வெளியுறவுக் கொள் கையைக் பற்றி இந்தியாவின் புத்திஜீவிகளில் ஒருவரான ஜே.பந்யோபத்யால் என்ற எழுத்தாளர் தனது ***The making of India's Foriegn Policy***



சேர் .ஜோன் கொத்தலாவல

என்ற நூலில் இந்தியாவின் வெளியுறவுக்கொள்கை எவ்வாறு தயாரிக்கப்படுகிறது என்பதைப் பற்றி விரிவாக எழுதியிருந்தார். வெளியுறவுக்கொள்கையின் ஆதிக்கத்தன்மை, ஆதிக்கவாதியா னது ஏன் என்பதைப் பற்றி விரிவாக எழுதியிருந்தார். இவற்றையெல்லாம் விரிவா கக் கூற நேரமின்மையால் பாண்டுங் மாநாட்டில் கலந்து கொண்ட நாடுகளை பற்றிப்பின்னர்பார்ப்போம்.ஒருநாட்டை இன் னொரு நாடு ஆக்கிரமிப்பதில்லை என்ற கொள்கை நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடுவ தில்லை என்ற கொள்கை இவைகள் நல்லகொள்கைகள். (தொடரும்)

# எதியோப்பிய விமான விபத்தில் 83 பயணிகளும் 7 சிப்பந்திகளும் பலி

(பெய்ரூட்)

மோசமான வானிலை காரணமாக எதியோப்பிய விமானம் மத்திய தரைக் கடல் பகுதிக்குள் விழுந்து விபத்துக்குள்ளானது. விமானத்தில் இருந்த 90 பேரும் பரிதாபமாக பலியாயினர். இவர்களில் 25 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

எதியோப்பியா அரசுக்குச் சொந்தமான எதியோப்பியன் ஜெட் விமானம் லெபனான் தலைநகர் பெய்ரூட்டிலிருந்து எதியோப்பியாவின் அட்டிஸ்ஸா அபாபா நகருக்கு நேற்று முன்தினம் புறப்பட்டுச் சென்றது. அப்போது அங்கு இடியுடன் கூடிய பலத்த மழை பெய்து கொண்டிருந்தது. விமானம் புறப்பட்ட ஐந்து நிமிடங்களில் விமான கட்டுப்பாட்டு அறையுடனான தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

விமான நிலைய ராடரில் இருந்தும் விமானம் மறைந்தது. இதனால் அதிகாரிகள் பதற்றம் அடைந்தனர். தீவிர விசாரணைக்குப் பின் அந்த விமானம் மத்திய தரைக் கடல் பகுதியில் தீப்பிடித்து எரிந்த நிலையில் கடலுக்குள் விழுந்தது தெரியவந்தது. பெய்ரூட்டின் தெற்குப் பகுதியில் உள்ள நமேஹ் என்ற நகரத்திலிருந்து 2.5 கடல் மைல் தொலைவில் அந்த விமானம் கடலுக்குள் விழுந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

விமானத்தில் 83 பயணிகளும் ஏழு விமான சிப்பந்திகளும் இருந்தனர். இவர்கள் அனைவருமே விபத்தில் உயிரிழந்திருக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது. விமானத்தில் பயணம் செய்தவர்களில் 54 பேர் லெபனானைச் சேர்ந்தவர்கள் என்றும் 22 பேர் எதியோப்பியாவைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரியவந்துள்ளது. விமானத்தில் குழந்தைகள் அதிக அளவில் இருந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். விபத்து நடந்த கடல் பகுதிக்கு லெபனான் கடற்படை கப்பல்கள் மீட்புப் படகுகள் விரைந்து சென்றன.

விமானத்தில் பயணம் செய்தவர்களின் உறவினர்கள் மற்றும் குடும்பத்தினர் ஏராளமானோர் பெய்ரூட் விமான நிலையத்தில் சோகத்துடன் திரண்டனர். விபத்து குறித்த தகவல் அறிந்ததும் அவர்கள் கதறி அழுதனர்.



லெபனான் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் பயங்கரவாதிகள் தாக்குதல் காரணமாக இந்தச் சம்பவம் நடக்கவில்லை. இது முற்றிலும் விபத்துத்தான். மோசமான வானிலை காரணமாகவே விமானம் விபத்துக்குள்ளாகியுள்ளது. இருந்தாலும் இது குறித்து தீவிர விசாரணை நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

## சூரிய ஒளியை விண்ணில் சேகரித்து பூமிக்கு கொண்டுவரத் திட்டம்

(லண்டன்)

பூமியின் சுற்றுவட்ட பாதையில் செய்மதிகளை அமைத்து சூரிய ஒளியைச் சேகரித்து அதை இன்பிராரெட் லேசராக மாற்றி பூமிக்குக் கொண்டு வர விண்வெளி பொறியியலாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இது பற்றி ஐரோப்பியாவின் மிகப் பெரிய விண்வெளி கம்பெனியான ஆஸ்டரியமின் தலைவர் மேத்யூ பெர்ரன் கூறியதாவது,

உலக அளவில் மின்சாரத் தேவை அதிகரித்துள்ளது. இந்தத் தேவையைச் சமாளிப்பதற்காக அனல் மின் நிலையங்களையோ அணுமின் நிலையங்களையோ அமைத்தால் அவை சுற்றுச் சூழலுக்கு ஆபத்தாக அமைந்துவிடுகின்றன.

சுற்றுச் சூழலைப் பாதிக்காத அளவில் மின்சாரம் பெறமுடியும் என்றால் அது காற்றாலை மூலமாகவோ சூரிய சக்தி மூலமாகவோ தான் முடியும். சூரிய சக்தியை விண்வெளியில் சேகரிக்கும் போது அது பெரும் அளவில் கிடைக்கும் என்று தெரிவித்துள்ளார். (2-6)



எத்தியோப்பிய விமான விபத்தில் இறந்த லெபனான் நாட்டைச் சேர்ந்தவர்களின் உறவினர்களுக்கு பெய்ரூட் விமான நிலையத்தில் வைத்து ஆறுதல் கூறும் லெபனான் பிரதமர் சாத் ஹரிரி.

## நேபாளத்தில் ஆற்றில் ஜீப் கவிழ்ந்து 8 பேர் பலி

(காத்மண்டு)

நேபாளத்தில் ஆற்றில் ஜீப் கவிழ்ந்ததில் இந்தியர் உட்பட 8 பேர் உயிரிழந்தனர். மேலும் 7 பேர் காயமடைந்தனர்.

நேபாளத்தின் மேற்குப் பகுதியான பஜஹாங் மாவட்டத்தில் உள்ள மாயூரி பாஹர் என்ற இடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இச்சம்பவம் நிகழ்ந்தது.

மாவட்டத் தலைநகர் செயின்பூர் நோக்கி 15 பேருடன் சென்று கொண்டிருந்த ஜீப் சேட்டி ஆற்றின் அருகே சென்றபோது எதிர்பாராதவிதமாக ஆற்றுக்குள் கவிழ்ந்தது. இச்சம்பவத்தில் ஜீப்பில் பயணம் செய்த 8 பேர் உயிரிழந்தனர்.

இறந்தவர்களில் சாரதி பசந்தா ஜோஷி, பகதூர்சிங், தீபக் பண்டாரி, தேவராஜ் கிரி, விஷ்ணு கிரி மற்றும் இந்தியரான பிரோஸ் ஆகியோர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இருவரின் உடல்கள் அடையாளம் தெரியவில்லை. மேலும் 7 பேர் படுகாயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிசார் தெரிவித்தனர். (6)


## மே இல் பிரிட்டிஷ் பொதுத் தேர்தல்?

(லண்டன்)

பிரித்தானிய நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதி நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சு பாப் ஜன்ஸ்வொர்த் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இதைத் தெரிவித்தார். ஜன்ஸ்வொர்த்தின் இந்த தகவலால் பிரிட்டன் மக்கள் மத்தியில் பெரிய எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஆனால் ஜன்ஸ் வார்த்தின் செய்தித் தொடர்பாளர் இதை மறுத்துள்ளார். ஜன்ஸ்வொர்த் கூறியதில் உண்மையில்லை. தேர்தல் குறித்து ஏற்கனவே பரவியிருந்த வதந்தி ஜன்ஸ்வொர்த் கருத்தால் வலுவடைந்துள்ளது என்றும் அவர் கூறினார். முன்னதாக பிரிட்டன் சுகாதார அமைச்சர் ஆண்டி பர்ன்ஹாம் மற்றொரு அமைச்சர் கிரிஷ் பிரையாண்ட் ஆகியோரும் பொதுத் தேர்தல் மே மாதம் 6 ஆம் திகதி நடைபெறலாம் என்று தெரிவித்தனர். (6)

## கெமிக்கல் அலி தூக்கிலிடப்பட்டார்



சதாம் ஹுசைனின் வலதுகரமாக விளங்கிய கெமிக்கல் அலி என அழைக்கப்பட்ட அலி ஹசன் அமல் மஜீட்டுக்கு திங்கட்கிழமை தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. சதாம் ஹுசைனின் நெருங்கிய உறவினரான அல்-மஜீட் நேற்று முன்தினம் தூக்கிலிடப்பட்டதாக ஈராக்கிய அரச தொலைக்காட்சி அறிவித்துள்ளது.

1988ஆம் ஆண்டில் ஹலாப்ஜா என்ற கிராமத்தில் ஈராக்கிய குர்டிஷ் இன மக்கள் மீது நடத்தப்பட்ட கூட்டுப் படுகொலைக்கு உத்தரவிட்ட குற்றம் தொடர்பில் இவருக்கு மரண தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. இந்தப் படுகொலையில் பெண்களும் குழந்தைகளும் உட்பட ஐயாயிரம் பேர் வரையில் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-6)




### வீட்டுக் காவலில் உள்ள

## ஆங்சாங் சூ கீ விடுதலை குறித்து அந்நாட்டு மந்திரி தகவல்

(யாங்கோன்)

மியான்மார் நாட்டில் இராணுவ ஆட்சி நடந்து வருகின்றது. அங்கு ஜனநாயக ஆட்சி கோரி பல ஆண்டுகளாக சூ கீ என்ற பெண் தலைவர் போராடி வருகிறார். இதனால் அவரை அந்த நாட்டு இராணுவ ஆட்சியாளர்கள் வீட்டுக் காவலில் அடைத்து வைத்து இருக்கிறார்கள். கடந்த 20 ஆண்டுகளில் 14 ஆண்டுகளாக இவ்வாறு அவர் வீட்டுக் காவலில் இருந்து வருகிறார். அவரை விடுதலை செய்ய வேண்டும் என்று உலக நாடுகள் பலவும் வலியுறுத்தியுள்ளன. ஆனால் அதற்கு அந்த நாடு சம்மதிக்கவில்லை.

இந்த நிலையில் அவர் எதிர்வரும் நவம்பர் மாதம் விடுதலை செய்யப்படுவார் என்று அந்த நாட்டு உள்துறை மந்திரி மேஜர் ஜெனரல் மாங்தோ அறிவித்தார். உள்துறை அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டம் கடந்த 21ஆம் திகதி நடந்தது. இந்தக் கூட்டத்தில் அவர் இதைத் தெரிவித்தார்.

கடந்த 20 ஆண்டுகளில் முதல் முறையாக பாராளுமன்றத் தேர்தலை ஒக்டோபர் மாதம் நடத்தப்படலாம் என்று தெரிகிறது. அதற்கு அடுத்த மாதம் அவர் விடுதலை செய்யப்படலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

## மேலும் 5 ஆண்டுகள் ஆப்கானிஸ்தானில் வெளிநாட்டு இராணுவம் நீடிக்கும்

(லண்டன்)

ஆப்கானிஸ்தானில் தலீபான் தீவிரவாதிகளை எதிர்த்துப் போராடுவதற்காக அமெரிக்கா தலைமையில் பல நாட்டு இராணுவங்கள் குவிக்கப்பட்டு உள்ளன. இந்த நாடுகளைச் சேர்ந்த ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட இராணுவ வீரர்கள் ஆப்கானிஸ்தானில் தங்கி இருக்கின்றார்கள். அவர்கள் 2001ஆம் ஆண்டு முதல் அங்கு தங்கி இருக்கிறார்கள்.

வெளிநாட்டு இராணுவ வீரர்கள் மேலும் 5 ஆண்டுகளுக்கு அங்கு தங்கி இருப்பார்கள் என்று லண்டனில் நடந்து வரும் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட இருக்கிறது.

லண்டனில் தீவிரவாதம் பற்றி விவாதிப்பதற்கான உலக மாநாடு நடந்து வருகிறது.

இந்த மாநாட்டில் அமெரிக்கா, இங்கிலாந்து, இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நேட்டோ நாடுகள் ஆகியவற்றின் தலைவர்கள் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டின்போதே இம்முடிவு எடுக்கப்பட இருக்கிறது. இத்தீர்மானத்தின் ஒரு பகுதி கசிந்து டைம்ஸ் பத்திரிகைக்குக் கிடைத்துள்ளது. அது இந்தத் தீர்மானத்தை வெளியிட்டுள்ளது. (2-6)

## அதிகரித்து வரும் நோயாளரின் எண்ணிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை விடுதிகளில் திடீரென நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

விடுதிகள் நிறைந்து நோயாளர்கள் தங்கி சிகிச்சை பெற்று வருவதைக் காணக் கூடியதாக உள்ளதாகவும் தினமும் 50 க்கு மேற்பட்டோர் விடுதிகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (2-29)

## தென்மராட்சியில் 9 ஆயிரத்து 920 பேர் மீளக்குடியேறியுள்ளனர்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் 3 ஆயிரத் து 411 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 920 பேர் மீளக்குடியேறியுள்ளனர்.

கடந்த எட்டு மாதங்களாக குடியேறியோரின் இத்தொகை எதிர்வரும் நாட்களில் மேலும் அதிகரிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (6-29)

## கலைப்பீட மாணவர்களுக்கான அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் 2005/2006 கல்வியாண்டு கலைப்பீட பொதுக்கலை மாணவர்களுக்கான குழுப்புகைப்படம் நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு எடுக்கவுள்ளதால் அனைத்து மாணவர்களையும் தவறாது சமூகம் தருமாறு யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (6-4)

## வடமராட்சியில் கிரனைட் வீச்சு

(அல்வாய்)

வடமராட்சி பகுதியிலுள்ள பொலிகண்டி வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளில் நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் 2கிரனைட் வீச்சு சம்பவங்கள் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் போது உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லையெனினும் குறைந்தளவ மக்களே தேர்தல் வாக்களிப்பில் கலந்து கொண்டதாக குறிப்பிடப்படுகிறது. (6-19)

## கொட்டப்படும் கழிவுகளால் சுகாதாரச் சீர்கேடு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முத்தமிழ் முன்பள்ளியினருகே சுகாதாரமற்ற முறையில் குப்பைகள் தேங்கியுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குழந்தைகள் கல்வி கற்கும் இவ் விடத்தில் எத்தனை தடவைகள் அறிவுறுத்தியும் தொடர்ந்து குப்பைகள் கழிவுகள் கொட்டப்படுவதால் டெங்கு நோய் பரவலுக்கு ஏதுவாக இச் செயற்பாடு அமையலாம் எனவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (2)

## சோதனை நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

ஆடியபாதம் வீதியில் கலைமகள் வீதி சந்திக்கும் முனைப்பிலுள்ள இராணுவ சோதனைச் சாவடியில் அடையாள அட்டை பரிசோதனை தற்பொழுது நிறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி இவ்வீதியில் பயணம் செய்வோர் அனைவரும் நிறுத்தப்பட்டு வாகன அடையாள அட்டையும் ஆள் அடையாள அட்டையும் பரிசோதித்தே பயணத்திற்கு அனுமதிக்கப்பட்டனர்.

ஆனால் தற்போது அந்த நடவடிக்கை நிறுத்தப்பட்டது. அன்றாடச் செயற்பாடுகளில் சில அசௌகரியங்களை தவிர்க்க ஏதுவாக அமைந்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (2)

## மத்தியஸ்தசபை உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச மத்தியஸ்த சபை உறுப் பினர்களுக்கான அடையாள அட்டைகள் கொழும்பு மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவினால் கோப்பாய் பிரதேச மத்தியஸ்த சபைக்கு வழங்கப்பட்டுள்ளதாக சபையின் தவிசாளர் இ.மயில்வாகனம் தெரிவித்துள்ளார்.

மேலும் உறுப்பினர்களுக்கான அடையாள அட்டைகள் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் காலை 9 மணிக்கு வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (6-134)

## கோடா வைத்திருந்தவருக்கு 60 ஆயிரம் ரூபா அபராதம்

(சாவகச்சேரி)

கசிப்பு உற்பத்தியில் பயன்படுத்தும் கோடா வைத்திருந்த மீசாலையைச் சேர்ந்த ஒரு வருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 60 ஆயிரம் ரூபா அபராதமும் மூன்று மாத கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

நீதிமன்றில் வழக்கு விசாரனைக்கு எடுக்கப்பட்ட போது இத்தீர்ப்பை வழங்கிய நீதிபதி அபராதத் தொகை செலுத்தத் தவறும் பட்சத்தில் ஒரு வருட சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க நேரும் என்று உத்தரவிட்டார். (2-29)

## யாழ். குடாநாட்டில் மரக்கறி விலை வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

தற்போது குடா நாட்டின் சந்தைகளில் மரக்கறியின் விலைகள் வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றன.

கூடிய விலைக்கு விற்கப்படும் உருளைக் கிழங்கு ,லீக்ஸ் , கரட் போன்ற மரக்கறிகள் மலிவான விலையில் விற்கப்படுவதைக் காணக்கூடியதாயுள்ளது.

மேலும் தொடர்ந்து கூடிய விலையில் விற்கப்பட்டு வந்த கத்தரிக்காய், பச்சை மிளகாய் என்பனவற்றின் விலைகளும் குறைவடைந்து காணப்படுவதுடன் தரமான மரக்கறிகளும் சந்தைகளில் பெருமளவில் காணப்படுவதை அவதானிக்கக் கூடியதாயுள்ளது.

தற்போது தம்புள்ள போன்ற இடங்களிலிருந்தும் , உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து இவ்வாறு தொகையான மரக்கறிகள் சந்தைக்கு கொண்டு வருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது. (2)

## தென்மராட்சிப் பகுதியில் வாக்களிப்பு நடவடிக்கைகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பகுதிகளில் ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பு சுமுகமாக நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் காலை வேளையில் குறைவான மக்களே வாக்களிப்பில் கலந்து கொண்டதாகவும் நண்பகல் வேளையில் கூடியளவானோர் வாக்களிப்பில் கலந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சாவகச்சேரியின் சில இடங்களில் தேசிய அடையாள அட்டை பழுதடைந்து தெளிவில்லாமல் காணப்பட்டதால் சிலர் வாக்களிக்க அனுமதிக்கப்படவில்லையென்றும் இன்னும் சில இடங்களில் கிராம சேவகரின் உறுதிப்படுத்தலுடன் வந்தவர்களும் வாக்களிக்க அனுமதிக்கப்படவில்லை எனக் குறிப்பிடப்படுகிறது.எனினும் இப்பகுதிகளில் வீதியில் போக்குவரத்து குறைவாக காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அப்பகுதிகளில் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு கோரி துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டதாகவும் இதனை மக்கள் கவனத்தில் கொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (29)


## இனந்தெரியாதோரின் விசமச் செயல்கள்

(யாழ்ப்பாணம்)

சில்லாலையிலுள்ள றோமன் கத்தோலிக்க பாடசாலை மற்றும் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி ஆகிய தேர்தல் வாக்களிப்பு நிலையங்களில் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோர் கற்களை வீதிக்கு குறுக்காக அடுக்கியும் வேலிகளை எரித்தும் அடாவடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் நேற்று காலை பொலிஸாரினால் துப்பரவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும் காலையில் மீண்டும் இந்த அட்டூழிய நடவடிக்கைகள் இடம்பெற்றதாகவும் இதனால் அப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை காணப்பட்டதால் அப்பகுதி மக்கள் வாக்களிக்காமல் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(2-58)



கெற்பலி அ.த.க.பாடசாலையில் அதிபராகப் பணியாற்றிய திருமதி கமலாசனி யோகநாதனுக்கான பாராட்டு விழாவில் மாணவன் ம.கதிரோசனன் மாலை அணிவித்து கௌரவிப்பதையும் அருகில் பிரதி அதிபர் செ.சிவபாதசுந்தரம் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக பிரிவிலுள்ள விளையாட்டுக்கழகங்களுக்கிடையே விளையாட்டு விழா எதிர்வரும் 29,30,31 ஆகிய திகதிகளிலும் மற்றும் பெப்ரவரி மாதம் 6,7, 13,14 ஆகிய திகதிகளிலும் நடைபெறவுள்ளது.

குறித்த திகதிகளில் வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், கபடி, கிரிக்கெற்,எல்லே ஆகியன ஆண், பெண் இருபாலாருக்குமாக இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலகத்தின் பல இடங்களிலும் விளையாட்டுக்களை நடாத்துவதற்கு பிரதேச செயலக விளையாட்டு பேரவை தீர்மானித்துள்ளதாக பங்கு பற்றும் விளையாட்டுக் கழகங்கள் பிரதேச செலயலகத்துடன் தொடர்பினை மேற்கொள்ளுமாறும் நல்லூர் பிரதேச செயலர் கேட்டுக்கொள்கின்றார்.

அத்துடன் பெப்ரவரி மாதம் 27,28 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ள இறுதி தடகள போட்டியின் போது பரிசளிப்பு விழாவும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-30)

யாழ். செய்திகள்

## சனசமூக நிலையங்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்கள் 2010ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாக அங்கத்தவர்களினை தெரிவு செய்து அனுப்புதல் மற்றும் 2009 ஆம் ஆண்டிற்கான நன்கொடைப் பணம் போன்ற நடவடிக்கைகளை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக மாநகர சபை அலுவலக நேரத்தில் மேற்கொள்ள முடியும் என மாநகர சபை ஆணையாளர் கேட்டுக்கொள்கின்றார். (30-2)

## 32 ஆவது ஆண்டு நிறைவும் கௌரவிப்பு விழாவும்

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ கிருஸ்ணாலயா நாடக மன்றத்தின் 32 ஆவது ஆண்டு நிறைவும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஸ்ரீ நாராயண சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சமாதான நீதவான் ஐ.வைத்தியலிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (6-4-36)

## குழந்தையின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கிணற்றில் வீழ்ந்த குழந்தையின் சடலம் ஒன்று மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

நேற்று காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த எ.அபிஷன் (வயது -3) என்ற குழந்தையே மரணமானதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த குழந்தை வீட்டு கிணற்றில் விழுந்தவேளை படுகாயங்களுக்கிலக்கான நிலையிலே உயிரிழந்துள்ளதாக கூறப்படுகிறது. (4-36)

## பற்கள் இல்லாத புலிகளுக்கு நிகரான நிலைமையே தமது நிலைமையும்

## தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது

(கொழும்பு)

பற்கள் இல்லாத புலிகளுக்கு நிகரான ஓர் நிலைமையே தமது நிலைமையும் எனத் தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

தேர்தல் பிரசாரப் பணிகள் கடந்த சனிக்கிழமை நள்ளிரவுடன் உத்தியோகபூர்வமாக நிறைவடைந்தபோதிலும் பிரசாரப் பணிகள் நேற்று முன்தினம் வரை தொடர்ந்ததாக செயலக அதிகாரிகள் விசனம் வெளியிட்டுள்ளனர். இலங்கையின் தேர்தல் சட்ட விதிகளுக்குத் தேர்தல் தினத்திற்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்னர் சகல விதமான பிரசாரங்களும் நிறுத்தப்பட வேண்டும்.

எவ்வாறெனினும் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களின் பதாகைகள்,சுவரொட்டிகள் ஆகியன தொடர்ச்சியாக காட்சிப்படுத்தப்பட்டு வந்ததாகவும் நாட்டின் பல பாகங்களிலும் இவ்வாறான சுவரொட்டிகள் காணப்படுவதாகவும் தேர்தல் தினமான நேற்றைய தினம் வரையில் இவை அகற்றப்படாத ஓர் நிலையே காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(2-6)

## கண்டியில் 68 பாடசாலைகள் அடுத்த மாதம் 15 வரை பூட்டு

(கொழும்பு)

கண்டி மாநகரசபை வட்டாரம் உட்பட கண்டி வத்தேகம ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த 68 பாடசாலைகள் கடந்த திங்கட்கிழமை மூடப்பட்டன. பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி வரை பாடசாலைகள் மூடப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்தார். ஜனாதிபதி தேர்தல் உட்பட 62ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் இம்முறை பள்ளேகலையில் நடைபெறவிருப்பதால் முன்கூட்டியே இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு இவ்வாறு மூடப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தெயட்டகிருல என்ற கண்காட்சிகள் இதில் முக்கிய இடம்பெறுவதால் அங்கே கடமை புரியும் பொலிசாருக்கும் ஏனைய ஊழியர்களுக்கும் தங்குமிட வசதிக்காகவே இவை மூடப்படுகின்றன.

இவ்வாறு மூடப்படும் பாடசாலைகளின் விடுமுறை நாட்களுக்குப் பதிலாக பெப்ரவரி மாதம் 15ஆம் திகதியின் பின்னர் இடம்பெறும் சனிக்கிழமை நாட்களில் வகுப்புக்களை நடத்தவும் திட்டம் வகுக்கப்பட்டிருப்பதாக மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் ஊடகங்களுக்கு எடுத்துரைத்தார்.

(2-6)

## டெனிஸ் புனர்வாழ்வு நிறுவனத்தின் இடம்பெயர்ந்த மக்களுக்கான உதவிகள்

டெனிஸ் புனர்வாழ்வு நிறுவனம் வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேச செயலகப் பிரிவில் உரும்பிராயில் நலன்புரி நிலையங்களில் உள்ளோருக்கு பலவித உதவிகளை வழங்கி வருகின்றது.

இத்தன்னார்வத் தொண்டு நிறுவனம் வலி. வடக்குப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் உள்ளோருக்குப் பலவித சேவைகளை வழங்கி வருகின்றது.

அவற்றில் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுச் சான்றிதழ் தேவைப்படுவோருக்குப் பதிவாளர் அலுவலக்ங்களுடன் தொடர்பு கொண்டு அவற்றைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றது.

அத்துடன் நலன்புரி நிலைய மக்களுக்கு சமூக அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், ஆற்றல்களை விருத்தி செய்தல் போன்றவற்றையும். செய்து வருகின்றது.

வீட்டுத்தோட்டம் செய்யக்கூடிய வாய்ப்புள்ள குடும்பங்களுக்கு விதைகள், விவசாய சிறு உபகரணங்கள் என்பவற்றையும் வழங்குகின்றது. நலன்புரி நிலையங்களில் உள்ளவர்களில் ஆண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு 20 ஆயிரம் ரூபா வரையிலான சுயதொழில் மூலப் பொருட்கள், உபகரணங்களை வழங்கி வருகின்றன.

ஊனமுற்றோரில் உபகரணங்கள் தேவைப்படுவோருக்குப் பொருத்தமான உபகரணங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றது.

அண்மையில் வன்னியிலிருந்து மீளக் குடியேறியோருக்கும் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவு தவிர்ந்த அனைத்து உதவிகளையும் வழங்கி வருகின்றது. (2-6)

## கெமிக்கல் அலி மரண தண்டனை எதிரொலி 3 இடங்களில் மனிதக் குண்டுத் தாக்குதல்

ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசேனின் உறவினர் அலி மஜீத் என்கிற கெமிக்கல் அலி ஈராக் அரசின் உயர் அதிகாரியாக இருந்த இவர் சதாம் ஹுசேனுக்கு எதிராக இருந்தவர்களைக் கொன்றுகுவித்தார். சதாம் ஹுசேனை எதிர்த்து வந்த குர்தீஷ் இன மக்கள் 5 ஆயிரம் பேரை விஷவாயு செலுத்தி கொன்றார். இதனால் அவர் கெமிக்கல் அலி என்று அழைக்கப்பட்டார்.

அமெரிக்கா ஈராக்குக்குள் புகுந்து சதாம் ஹுசேன் ஆட்சியை தூக்கி எறிந்தது. அப்போது சதாம் ஹுசேன் உள்ளிட்ட பலர் கைதானார்கள். கெமிக்கல் அலியும் கைது செய்யப்பட்டார். சதாம் ஹுசேனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. கெமிக்கல் அலி மீது பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. இதில் 3 வழக்குகளில் ஏற்கனவே அவருக்கு மரண தண்டனை அறிவிக்கப்பட்டிருந்தது. குர்தீஷ் மக்களை கொன்றதாக தொடரப்பட்டிருந்த 4ஆவது வழக்கிலும் கடந்த வாரம் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இதையடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை அவருக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது. சிவப்பு உடை அணிவித்து முகத்தில் கறுப்பு துணியை கட்டி தூக்கு மேடைக்கு அழைத்து வந்தனர். பின்னர் தூக்கில் தொங்கவிட்டு மரண தண்டனை நிறைவேற்றினார்கள்.

அவருடைய உடலை இரகசிய இடத்தில் வைத்துள்ளனர். எங்கு அடக்கம் செய்யப்படும் என்ற தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை. தற்போது கெமிக்கல் அலிக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்ட தகவல் வெளியானதும் ஈராக்கில் 3 இடங்களில் ஒரே நேரத்தில் மனிதக் குண்டுத் தாக்குதல்கள் நடந்தன. பாக்தாத்தில் உள்ள 3 பெரிய ஹோட்டல்களை குறிவைத்து இந்தத் தாக்குதல் நடந்தது.

முதல் குண்டு அங்குள்ள டைக்கில் ஆற்றங்கரை ஓரம் உள்ள ஷெரட்டல் ஹோட்டலில் வெடித்தது. மனித குண்டு தீவிரவாதி ஒருவன் ஹோட்டலுக்குள் புகுந்து வெடிக்கச் செய்தான். இதில் 14 பேர் உயிரிழந்தனர். அடுத்த 5 நிமிடத்தில் பாபிலோப் என்ற ஹோட்டலில் குண்டு வெடித்தது. இதில் 7 பேர் உயிரிழந்தனர்.

அடுத்து வெளிநாட்டினர் அதிகம் தங்கி இருக்கும் ஹமரா ஹோட்டலில் மனித குண்டுத் தாக்குதல் நடந்தது. இதில் 16 பேர் உயிரிழந்தனர். அவர்களில் பலர் வெளிநாட்டினர். 3 குண்டு வெடிப்பிலும் மொத்தம் 36 பேர் உயிரிழந்தனர். (2-6)

## நாவலப்பிட்டி வாக்களிப்பு நிலையங்களில் ஆயுததாரிகளின் அச்சுறுத்தல்கள்

(கொழும்பு)

நாவலப்பிட்டியவில் உள்ள நான்கு வாக்களிப்பு நிலையங்களுக்குத் திடீரென வந்த ஆயுததாரிகள் அங்கு கடமையிலிருந்தவர்களை ஆயுத முனையில் அச்சுறுத்தி வாக்குப் பெட்டிகளைக் கடத்திச் சென்றுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் ஆணையாளரிடம் முறையிட்டுள்ளது.

அத்துடன் மேற்படி நான்கு வாக்களிப்பு நிலையங்களிலும் மீள்வாக்குப் பதிவை மேற்கொள்ளும்படியும் கோரிக்கை விடுத்துள்ளது.

இச்சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாவலப்பிட்டிப் பகுதியில் நேற்று முன்தினமிரவு அப்பிரதேச மக்களின் வீடுகளுக்குச் சென்ற இனம்தெரியாத ஆயுததாரிகள் அடையாள அட்டைகளை வாங்கி சோதனையிட்டுள்ளனர் என்றும் முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

## மெனிக்பாம் முகாமில் 4 கிலோ மீற்றர் தூரத்துக்குச் சென்று வாக்களித்த மக்கள்

(கொழும்பு)

இடம்பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள மெனிக்பாம் முகாம் மக்கள் நீண்ட நடைபயணத்தை மேற்கொண்டே வாக்களிப்பதற்காக வாக்குச்சாவடிகளுக்குச் சென்றனர்.

மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள் வாக்களிப்பதற்கென வலயம் 01 பகுதியிலேயே வாக்குச் சாவடி அமைக்கப்பட்டது.

எனினும் வலயம் 04 இல் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கும் வலயம் 01இல் அமைந்துள்ள வாக்குச் சாவடியிலேயே வாக்களிக்கும் முகமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. இதனால் மக்கள் சுமார் 4 கிலோ மீற்றர் தூரத்தை நடந்தே வாக்களிப்பதற்காக சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பகுதிக்கு பஸ் போக்குவரத்து ஏற்படுத்தப்பட்டாலும் ஓரிரு பஸ்களே சேவையில் ஈடுபட்டதென்றும் எனினும் மக்கள் மிகவும் ஆர்வமாகவும் உற்சாகமாகவும் வாக்களிப்பில் ஈடுபட்டதை பார்க்கக் கூடியதாக இருந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்துள்ளன.

இப்படி வாக்களிக்கச் சென்றவர்களுக்கு குறித்த வேட்பாளருக்கே வாக்களியுங்கள் என்று வெளிப்படையாக அழுத்தங்கள் கொடுக்கப்பட்டாலும் மறைமுகமாக குறித்த ஒரு வேட்பாளருக்கே வாக்களிக்கும்படி அழுத்தம் கொடுக்கப்பட்டதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (2-6)

## வேற்றுக்கிரகங்களிலும் உயிரினங்கள் வாழலாம்

### ஆய்வாளர் நம்பிக்கை

பூமியைத் தவிர்ந்த வேற்று கிரகங்களில் உயிரினங்கள் வாழக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக பிரித்தானியாவின் சிரேஸ்ட வானியல் ஆய்வாளர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

முன்னொருபோதும் இல்லாத வகையில் வேற்றுக் கிரக உயிரினங்களின் ஆய்வுகளுக்கு தற்போது முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இவ்வாறான ஆய்வுகளின் மூலம் மனிதத் தன்மையில் மாற்றம் ஏற்படும் என றோயல் வானியல் ஆய்வாளர் சங்கத்தின் தலைவர் லோர்ட் ரீஸ் தெரிவித்துள்ளார்.

விண்வெளி உயிரினங்கள் தொடர்பில் லண்டனில் நடைபெற்ற விசேட கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

வேற்றுக் கிரக உயிரினங்கள் தொடர்பில் கடந்த ஐம்பது வருடங்களாக வானியல் ஆய்வாளர்கள் கவனம் செலுத்தி வருகின்றனர்.

எனினும் இதுவரையில் உறுதியான தகவல்கள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

எனினும் முன்னொரு போதும் இல்லாத வகையில் வேற்றுக்கிரக உயிரினங்கள் பற்றிய தகவல்கள் கிடைப்பதற்கான சாத்தியம் தற்காலத்தில் அதிகமாகக் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் தற்போது தொழில்நுட்பம் விருத்தியடைந்துள்ளதாகவும் கடந்த காலங்களை விடவும் ஆய்வுகளை துல்லியமாக நடத்தக் கூடிய சந்தர்ப்பம் காணப்படுவதாக வும் அவர் தெரிவித்துள்ளார்.


பூமிக்கு நிகரான கிரகங்கள் தொடர்பான தகவல்கள் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் இவ்வாறான கிரகங்களில் உயிரினங்கள் வாழக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(2-6)



இங்கிலாந்து சென்ற அயர்லாந்து பிரதமர் பிரைன் கவுனை (இடது) லண்டனில் உள்ள தமது இல்லத்தில் பிரதமர் கோர்டன் பிரவுன் (வலது) வரவேற்றார்.







ஜனாதிபதித் தேர்தலின் போது ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க வாக்களிக்கச் செல்வதையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வாக்களிப்பதையும் வாக்களித்த மக்களையும் படங்களில் காணலாம்.

# நுவரெலியாவில் மக்கள் ஆர்வத்துடன் வாக்களிப்பு

நுவரெலியா மாவட்டத்தில் 491 கிராம சேவகர் பிரிவிலே 389 வாக்களிப்பு நிலையங்களில் 4 இலட்சத்து 57 ஆயிரத்து 137 வாக்காளர்கள் தங்களுடைய வாக்குகளை அளிப்பதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்றும் இந்த வக்காளர்கள் நேற்று காலை தொடக்கம் விறுவிறுப்பாகவும் ஆர்வத்துடனும் தங்களுடைய வாக்குகளை அளித்துள்ளார்கள் என்வும் இதற்கு பொலிஸ் மற்றும் இராணுவ பாதுகாப்பு என்பன வழங்கப்பட்டிருந்தன. இதனால் எந்தவிதமான அசம்பாவிதங்களும் இல்லாமல் மிகவும் அமைதியான முறையில் தேர்தல் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.(2-4)

## இன்று மது கிடையாது

நாட்டிலுள்ள சகல மதுபான விற்பனை நிலையங்களையும் நேற்று தொடங்கி இன்று வரை மூடிவிடுமாறு கலால் திணைக்களம் உத்தரவிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு நடைபெறும் காலத்தில் நாட்டில் சட்டத்தையும் அமைதியையும் நிலை நாட்டும் பொருட்டே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக கலால் திணைக்களம் கூறுகிறது. (2-6)

## வழமைக்கு திரும்பிய நல்லூர் பின் வீதி

நல்லூர்பின் வீதி வழமை போன்று தற்காலிக கடைகள் ஏதுமின்றி தற்போது காணப்படுகின்றது.

இவ் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டவர்களை அங்கு காணமுடியவில்லை. அத்தோடு வாகனப் போக்குவரத்துக்கு தடையான மக்கள் நெருக்கமும் அற்று காணப்பட்டதை அவதானிக்க கூடியதாகவிருந்தது.

மேலும் நேற்றையதினம் யாழ். நகர வீதிகள் எங்கும் பல வியாபார நிறுவனங்கள் பூட்டிய நிலையிலேயே காணப்பட்டதை அவதானிக்க கூடியதாக இருந்தது. (2)

# அவுஸ்திரேலியாவில் தொடர்கின்றது இந்தியமாணவர் மீதான தாக்குதல்

அவுஸ்திரேலியாவில் இந்தியர்கள் மீது இனவெறி தாக்குதல் நடப்பது தொடர் கதையாக நீடித்து வருகிறது.

நேற்று மெல்போர்ன் நகரில் 2 இந்திய மாணவர்கள் மீது தாக்குதல் நடந்தது. அதில் ஒருவரின் காதில் கத்தியை வைத்து கிழித்தனர். அவர் படுகாயம் அடைந்தார்.

இது தொடர்பாக 7 பேரை கைது செய்து இருப்பதாக ஆஸ்திரேலிய பொலிசார் அறிவித்து உள்ளனர். (2-6)

ஸ்ரீ அம்மா பகவான் சரணம்



ஸ்ரீ அம்மா பகவான் பூஜையும் வரதீட்சை மாலை அணிதலும்

இடம்:- யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை
நேரம்:- காலை 9.30 மணிக்கு
காலம்:- 29.01.2010 வெள்ளிக்கிழமை

ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 4.00 மணிக்கு தியானப் பயிற்சி இடம் பெற்று வருகின்றது. எனவே அனைத்துப் பக்தர்களும் இப்பயிற்சியில் கலந்து கொள்ளும் வண்ணம் வேண்டப்படுகின்றார்கள். கலச பூசை, பாத பூசைகள் அனைத்தும் புதிய முறையிலாக மாற்றப்பட்டுள்ளது. துளசி பாத பூசை, பழவகை பாதபூசை, அறுபது திரவிய பாதபூசை (60) மற்றும் கலசபூசை 1, 2, 3 அனைத்துப் பூஜைகளும் பஜனைப் பாடல்களும், மந்திரங்களும் C.D ஊடாகப் செய்யப்படும்என்பதை அறியத்தருகின்றோம்.

உங்கள் இல்லங்களிலும் இப்பூசை செய்து ஸ்ரீ அம்மா பகவானின் இறையருள் பெற்று உய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

மேற்குறிப்பிட்ட பூஜைகள் அனைத்தும் நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் நடைபெறும்.

T.P: 021 222 2935
071 8565727

ஸ்ரீ கல்கி ஆன்மீக மையம்,
யாழ் தலைமையகம்,
மணியர் பதிலேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(C-4341)

# சூடான் அதிபர் மீது செருப்பு வீச்சு

(கார்டூம்)

ஈராக்கில் அமெரிக்க முன்னாள் அதிபர் புஷ் மீது நிருபர் ஒருவர் சப்பாத்தை வீசினார். அதை தொடர்ந்து உலகில் பல்வேறு நாடுகளிலும் தலைவர்கள் மீது செருப்புகளை வீசும் சம்பவம் நடந்து வருகிறது.

இதேவேளை சூடான் நாட்டு அதிபர் ஒமர் அல்பஷீர் ஒரு விருந்து நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டார். அதில் பங்கேற்ற ஒருவர் ஒமர் அல் பஷீர் ஒரு விருந்து நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டார். அதில் பங்கேற்ற ஒருவர் ஒமர் அல் பஷீர் மீது செருப்பை கழற்றி வீசினார். இது அதிபர் மீது படவில்லை. உடனே அந்த நபரை மடக்கி பிடித்தனர். அவர் யார்? எதற்காக செருப்பை வீசினார் என்ற



தகவல் எதையும் வெளியிடவில்லை. (2-6)

இரண்டு சக்கர உழவு இயந்திரம், கார், வான், மினிபஸ், லொறி, கொள்கலன் லொறி, உழவு இயந்திரம் இவை அனைத்திற்குமான ரயர், ரியூப் வகைகள் எம்மிடம் கொம்பனி விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

Your Trusted Transport Partner



Available Islandwide

TRACTOR TYRES | TRUCK TYRES | LIGHT TRUCK TYRES | RADIAL TYRES | THREE WHEEL TYRES

CEAT ரயர் வகைகளுக்கு 100% உத்தரவாதம் உள்ளது. (உற்பத்திக் குறைபாடுகளுக்கு மட்டும்)




A 9 பாதையூடாக போக்குவரத்தில் ஈடுபடும் வாகன உரிமையாளர்களே... அதிக சுமைகளைத் தாங்கக்கூடிய வாகனங்களுக்கென பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட லொறி ரயர் வகைகளை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

CEAT RADIALS

CEAT SRI LANKA யாழ். மாவட்ட முகவர்

POPULAR MOTOR STORES

270, Stanley Road, Jaffna. Tel: 021 222 2403, 021 222 3535 Fax: 021 222 3535

# விஜிதஹேரத் சோதனைச் சாவடியில் தடுத்து வைக்கப்பட்டார்

(கொழும்பு)

கிளிநொச்சிப் பிரதேசத்திலுள்ள வாக்குச் சாவடிகளுக்கு கட்சி முகவர்களாகச் செயற்படுவோரை அழைத்துச் சென்று கொண்டிருந்தபோது இரட்டைப் பெரியகுளம் சோதனைச் சாவடியில் தமது பயணத்திற்குத் தடங்கல் ஏற்படுத்தப்பட்டதாக மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஐக்கிய ஜனநாயக முன்னணி ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட சாந்த கமகேயுடன் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தானும் கிளிநொச்சி வாக்குச் சாவடிக்கான முகவர்கள் 40 பேருடன் இரண்டு பஸ் வண்டிகளில் சென்று கொண்டிருந்தபோது இரட்டைப் பெரியகுளம் சோதனைச் சாவடியில் இராணுவத்தினர் தங்களைத் தடுத்து நிறுத்தியதாகவும் அதன் காரணமாக தமது பயணம் 3 மணி நேரமளவில் தாமதமடைந்ததாகவும் விஜித ஹேரத் கூறினார்.

அதன் பின்னர் வவுனியா சென்று பிரதிப் பொலிஸ்மா அதிபருடனும் பொலிஸாருடனும் உயர் பொலிஸ் அதிகாரிகளுடனும் பேசி பல்வேறு முயற்சிகளின் பின்னரே தாம் பயணத்தை தொடர்ந்ததாகவும் அவர் கூறினார். (2-6)

# முன்னாள் கொமாண்டோக்கள் 20 பேர் கைது

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பின் போது சட்ட ரீதியற்ற நடவடிக்கைகளில் ஈடுபட திட்டமிட்டதாக கூறப்பட்டு படைகளில் இருந்து தப்பி வந்த முன்னாள் இராணுவ கொமாண்டோக்கள் 20 பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

குருநாகல் கொக்கரால்ல பிரதேசத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவர்களிடம் இருந்து பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே படைகளில் இருந்து தப்பி வந்தவர்கள் மீது சரத்பொன்சேகாவுக்கு ஆதரவளித்து வருவதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (2-6)



2009ஆம் ஆண்டுக்கான சமுர்த்தி கம்நெரும திட்டத்தின் கீழ் ஜே/70 கிராம அலுவலர் பிரிவின் கதிற்றல் வீதி புனரமைப்பு செய்யப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. மேற்படி வீதியை யாழ்ப்பாண பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் நாடாவெட்டி திறந்து வைப்பதையும் அருகில் திட்டப் பணிப்பாளர், முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் தொழில் நுட்ப உத்தியோகத்தர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் கைதான வங்கி முகாமையாளர் நிபந்தனையில் விடுதலை

(கொழும்பு)

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த தெஹிவளை செலான் வங்கி முகாமையாளர் சிவஞானி முராரிசா நேற்று முன்தினம் கொழும்பு நீதிவான் மொகமட் மக்கியினால் நிபந்தனையின் பேரில் விடுதலை செய்யப்பட்டார்.

இவரை கடந்த ஒக்டோபர் மாதம் 13ஆம் திகதி பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் தெஹிவளை செலான் வங்கிக்குச் சென்று விசாரணைக்காக அழைத்துச் சென்றனர். பின்னர் பாதுகாப்பு செயலாளரின் உத்தரவின் படி தடுப்புக் காவலில் வைத்து விசாரகைளை நடாத்தி வந்தனர்.

தன்னை கைது செய்ததும் தடுத்து வைத்ததும் சட்டத்துக்கு முரணானது எனத் தெரிவித்து சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா மூலம் இவர் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுத்தாக்கல் செய்திருந்தார். தன்னை விடுதலை செய்யும் படியும் தனக்கு நஷ்டஈடாக ரூபா5 இலட்சம் பெற்றுத் தரும்படியும் அவர் மனுவில் கோரியிருந்தார். இந்த மனு விசாரணைக்காக மார்ச் மாதம் 3ஆம் திகதி உயர் நீதிமன்றில் எடுக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் இவர் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் இவர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி. தவராசா நீதிமன்றில் தனது வாதத்தில் குறிப்பிட்டதாவது,

எனது கட்சிக்காரர் தெஹிவளை செலான் வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் ஆவார். அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட சமாதான ஒப்பந்த காலத்தில் இவர் கிளிநொச்சி சென்று வந்ததாகவும் அக் காலத்தில் இவர் அத்தியடி செலான் வங்கியில் முகாமையாளராகவிருக்கும் பொழுது சில புலிச் சந்தேக நபர்களுக்கு வங்கியில் கணக்கு திறக்கப்பட்டதாகவும் அது சம்பந்தமாக விசாரணை நடாத்தப்டுவதாகவும் பொலிஸார் தமது அறிக்கையில் குற்றம் சாட்டியுள்ளனர்.

எனது கட்சிக்காரர் வங்கி முகாமையாளர் என்ற முறையில் தனது கடமையையே செய்துள்ளார். இவருக்கும் சந்தேக நபர்களுக்கும் எந்த தனிப்பட்ட தொடர்பும் இல்லை. மேலும் இவர் ஒரு சமாதான நீதவான். இவருக்கும் வங்கியில் கணக்கு வைத்திருந்த சந்தேக நபர்களுக்கும் எந்தவித சட்ட முரணான தொடர்புகள் உள்ளன என்பது குறித்து விசாரணையில் புலனாகவில்லை. எனவே இவரை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

இதனையடுத்து உத்தரவு கிடைத்தால் நீதிமன்றில் ஆஜராகும்படி நிபந்தனை விதித்து நீதிபதி வங்கி முகாமையாளரை விடுதலை செய்தார். (2-6)

# பக்கச்சார்பற்ற நிலையிலேயே விசாரணைகள் நடைபெறுகின்றன

## குற்றப்புலனாய்வுத்துறை பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரின் விசாரணைகள் பக்கச்சார்பற்றவை. இதன் பிரகாரம் சரத் பொன்சேகாவின் மருமகனான தனுக திலகரத்ன மீதான ஆயுதக் கொள்வனவு குற்றச்சாட்டு விசாரணையானது தேர்தலின் பின்னர் முன்னெடுக்கப்படும் என்று குற்றப்புலனாய்வுத் திணைக் களத்தின் பணிப்பாளர் எம்.கே. டீ.விஜய அமரசேகர தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டின் போது தகவல் தருகையிலேயே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

ஐகோப் நிறுவனத்தினூடாக ஆயுத கொள்வனவு மோசடியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஜெனரல் சரத்பொன்சேகாவின் மருமகனான தனுக திலகரத்ன தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்த குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தனுகவிடம் விசாரணை நடத்துவதற்காக கடந்த 20ஆம் திகதி அவரை திணைக்களத்துக்கு வருமாறு அழைப்பு விடுத்தது. இருப்பினும் அந்த அழைப்பு விடுக்கப்பட்டு சில மணி நேரங்களிலேயே பதில் அனுப்பிய அவர் தேர்தல் நடவடிக்கைகள் காரணமாக தற்போது வர முடியாதுள்ளதாக அறிவித்திருந்தார்.

அவருடைய் பதிலை கருத்திற்கொண்டும் தேர்தல் காரணமாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினருக்கும் வேலைப்பளு அதிகமாகக் காணப்பட்டதனாலும் குறித்த விசாரணையினை தேர்தலின் பின்னர் நடத்துவதாகவும் அறிவிப்பு விடுத்ததும் திணைக்களத்துக்கு வருகை தருமாறும் அவருக்கு மீண்டும் அறிவித்தோம்.

இந்த நிலையில் கடந்த 23ஆம் திகதி காலியில் இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியுள்ள சரத் பொன்சேகா தனுகவிடம் விசாரணை நடத்துவதை விடவும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் சீருடைய களைந்து விட்டு வீடு திரும்பலாம் என்று திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக கூறி யுள்ளார். அவ்வாறு எந்தவொரு அதிகாரியும் கூறியிருக்க வாய்ப்பில்லை அவர் கூறுவது முற்றிலும் தவறானதாகும் என்றார். (2-6)

## ஏறாவூரில் தமிழ் இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டு கொலை

(கொழும்பு)

ஏறாவூர் பிரதேசத்தில் 18 வயது தமிழ் இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். இவரது இறந்த உடல் நேற்று முன்தினம் ஒதுக்கு புறம் ஒன்றில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கூரான ஆயுதங்களால் குத்தப்பட்டு அடி காயங்களும் காணப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ள பொலிஸார் குறித்த இளைஞரின் கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவருவதாக தெரிவித்துள்ளனர். (2-6)

## இம்முறை தேர்தலில்

# ஊடகவியலாளர்கள் மீது அதிக வன்முறைப் பிரயோகம்

(கொழும்பு)

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் ஊடகத்துறையினர் மீது அதிக வன்முறைகளைக் கொண்டதாக அமைந்துள்ளதாக அனைத்துலக ஊடகவியலாளர் அமைப்பு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது,

பொன்சேகாவிற்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பு தொடர்பான தகவல்களை சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் காவல்துறையினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் பல சோதனைச் சாவடிகளில் பல தடவைகள் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். இது ஊடகவியலாளர்களின் கடமையை தடுக்கும் நோக்கம்கொண்டது.

அரச ஊடகங்களின் ஊடாக தமது பிரசாரத்தை மேற்கொள்ளும் அரசு தனியார் ஊடகங்களை கட்டுப்படுத்த முனைகின்றது. தேர்தலின் போது ஊடக நடுநிலைமையை கடைப்பிடிப்பதற்கு மஹிந்த அரசு தவறியுள்ளது.

மேலும் எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் அரச ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டதும் சுயாதீன ஊடகவியலாளர் அரச ஆதரவாளர்களால் தாக்கப்பட்டதும் கண்டனத்திற்குரியது. எல்லா வகையான வன்முறைகளையும் நாம் கண்டிக்கிறோம் என அது மேலும் தெரிவித்துள்ளது. (2-6)

# யார் வெற்றியீட்டினாலும் அவருடன் ஒத்துழைப்போம்

## இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)



இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றியீட்டி னாலும் அவருடன் ஒத்துழைப்பது இந்திய அரசாங்கத்தின் நோக்கமாகும் என்று அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஜனநாயகமே இறுதியில் வெற்றி பெற்றமை குறித்து இந்தியா மகிழ்ச்சி அடைவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.


இலங்கை மக்களுக்கு இது முக்கிய நாள் என்று குறிப்பிட்டுள்ள இந்திய வெளிவிவ கார அமைச்சர் தாங்கள் விரும்பிய அரசாங் கத்தைத் தெரிவு செய்வதற்கு அவர்களுக்குக் கிடைத்த ஒரு சந்தர்ப்பம் இதுவாகும். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அந்நாட்டு மக்கள் தெரிவு செய்த தலைவர் எவராக இருந்தாலும் அவருடன் இந்தியா நிச்சயமாக ஒத்துழைக்கும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார் என ஏஎன்ஐ செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. (2-6)



இந்தியா - தென்கொரியா ஆகிய நாடுகளுக்கு இடையிலான முக்கிய ஒப்பந்தம் அண்மையில் கைச்சாத்திடப்பட்டது. இந்நிகழ்வில் பிரதமர் மன்மோகன்சிங், அதிபர் லீ மையங் முன்னிலையில் இரு நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர்களான எஸ்.எம். கிருஷ்ணா மற்றும் யூ-மைன்ட் - ஹவான் ஆகியோர் மாற்றிக் கொள்வதைப் படத்தில் காணலாம்.

# பாகிஸ்தான் அதிகாரியின் படம் தவறுதலாகவே இடம் பெற்றது

## பத்திரிகை விளம்பரம் தொடர்பில் சர்ச்சை




பெண் கருக்கலைப்பு, பெண் சிசுக் கொலை போன்றவற்றில் இந்தியப் பெற்றோர்கள் ஈடுபடுவதை நிறுத்தக் கோரும் வகையிலான பத்திரிகை விளம்பரத்தில் பிற இந்தியப் பிரபலங்களின் படங்களோடுவிமானப்படைத்தளபதி ஏர் சீஃ ப் மார்ஷல் தன்வீர் மஹ்மூத் அகமதுவினுடைய படமும் இடம் பெற் றிருந்தது.

தற்போதுபாகிஸ்தான்இராணுவத்தின் [illegible] இந்த தன்வீரின் விளம்பரத்துக்குள் இடம்பெற நேர்ந்தது என்பது குறித்து டெல்லியிலுள்ள இந்திய பிரதமர் அலுவலகம் விசாரணை ஒன்றுக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்திய அரசாங்கத்தின் பத்திரிகை விளம்பரம் ஒன்றில் பாகிஸ்தான் விமானப் படையின் முன்னாள் தலைவரின் படம் தவறுதலாகப் பயன்படுத்தப்பட்டமை குறித்து இந்திய அதிகாரிகள் வருத்தம் தெரிவித்துள்ளனர். (2-6)


# மரபணு மாற்ற கத்தரிக்காய்; அனுமதிப்பது தொடர்பில் சர்ச்சை

மரபணு மாற்ற தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் கத்தரிக்காயை இந்தியாவில் அனுமதிப்பது குறித்து பல்வேறு விதமான கருத்துக்கள் எழுப்பப்பட்டு வருகின்றன.

இந்திய வேளாண்துறை அமைச்சர் அந்தக் கத்திரிக்காய்க்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்துள்ள நிலையில், சுற்றுச் சூழல் துறை அமைச்சர் ஜெயராம் ரமேஷ் இதுவரை அதற்கு உடன்பாடு தெரிவிக்கவில்லை.

இந்த நிலையில் அந்தக் கத்திரிக்காயை தமிழ் நாட்டில் அனுமதிக்கக் கூடாது என்று பல்வேறு சுற்றுச் சூழல் அமைப்புக்களை உள்ளடக்கிய பாதுகாப்பான உணவுக்கான கூட்டமைப்பினர் நேற்று முன்தினம் சென்னையில் முதல்வர் கருணாநிதியைச் சந்தித்துக் கோரிக்கை விடுத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# மக்களில் சிறந்த நபர்களும் திறமையானவர்களும் அரசியலுக்கு வருவதில்லை-மன்மோகன் சிங்



(புதுடில்லி)

மக்களில் திறமையானவர்களும், சிறந்த நபர்களும் அரசியலுக்கு வருவதில்லை. வசதி இல்லையெனில், தேர்தலில் போட்டியிட முடியாது என்ற நிலை காணப்படுகிறது. அதனால், சரியான பின்னணி கொண்டவர்களும், படித்தவர்களும், தேர்தலில் பங்கேற்கும் வகையில், தேர்தல் சீர்திருத்தங்களை கொண்டுவர வேண்டியது அவசியம் என பிரதமர் மன்மோகன் சிங் வலியுறுத்தியுள்ளார்.

தேர்தல் ஆணையகத்தின் கொண்டாட்டத்தின் தொடக்க விழா நிகழ்ச்சியில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு பேசிய பிரதமர் மன்மோகன்சிங் மேலும் கூறியதாவது,

தேர்தலில் போட்டியிடுவோரின் குறிப்பாக வெற்றி பெறும் பல வேட்பாளர்களின் பின்னணிகள் சரியாக இருப்பதில்லை. அவர்கள் மக்களின் நம்பிக்கையை பெற்றவர்களாக இருப்பதில்லை.

சிறந்த கல்வி அறிவு பெற்றவர்களும் மத்தியதர வகுப்பினரும் தேர்தல் நடவடிக்கையில் பங்கேற்பதில் இருந்து விலகி இருக்கின்றனர்.

அவர்களில் பெரும்பாலானவர்கள் வாக்குப் போடும் கடமையைக்கூட செய்வதில்லை. பல தொகுதிகளில் குறைவான அளவில் வாக்குகள் பதிவாவது பல வகையிலும் பாதிப்புக்களை ஏற்படுத்துகிறது. இந்தப் பிரச்சினைகளைக் கையாள ஏதாவது செய்ய வேண்டும் என்பது நம்மிடையே ஒருமித்த கருத்து நிலவினாலும் அதை எப்படி செயல்படுத்துவது என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது.

இது போன்ற பிரச்சினைகள் மற்றும் கேள்விகளுக்கு எளிதில் விடைகான முடியாது என்றாலும் தேர்தல் ஆணையகம் இந்தப் பிரச்சினைகளை எல்லாம் பரிசீலித்து மத்தி அரசுக்கு தன் பரிந்துரைகளை வழங்கியுள்ளது.

நாடாளுமன்ற நிலைக்குழுவும் இந்தப் பிரச்சினைகள் பலவற்றை பற்றி பரிசீலித்துள்ளது. வரக்கூடிய ஆண்டுகளிலாவது இவற்றிற்கு தீர்வு காண முடியுமென நம்புகின்றேன்.

அப்படி தீர்வு காணப்பட்டால் நமது ஜனநாயகத்தின் தரம் மேலும் மேம்படும். இவ்வாறு மன்மோகன் சிங் கூறினார். (2-6)

# நிகர்நிலை பல்கலைக்கழகங்கள் தொடர்பான இந்திய அரசின் முடிவுக்கு தற்காலிக தடை

## உச்சநீதிமன்றம் உத்தரவு

இந்திய மத்திய அரசால் அங்கீகாரத்தை இரத்து செய்ய முடிபு செய்யப்பட்டுள்ள 44 நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களின் தற்போதைய நிலை தொடர வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் திங்கட்கிழமை உத்தரவிட்டது.

மேலும் அந்த பல்கலைக் கழகங்களுக்கும் அவற்றின் பிரதான பல்கலைக்கழகங்களுக்கும் அறிவித்தல் அனுப்ப நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதன் மூலம் அந்த நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களை மற்றும் அங்கு படிக்கும் மாணவர்களுக்கு தற்காலிக நிவாரணம் கிடைத்துள்ளதாகக் கருதப்படுகிறது.

இதற்கமைய நாடு முழுவதும் உள்ள 124 நிகர் நிலைப் பல்கலைக் கழகங்களில் 44 கல்வி நிறுவனங்கள் விதி முறைகளைப் பின்பற்றவில்லை என்று கூறி உயர்நிலைக் குழு அளித்த அறிக்கை அடிப்படையில் அவற்றின் அங்கீகாரத்தை இரத்து செய்ய முடிபு செய்திருப்பதாக உச்ச நீதிமன்றத்தில் மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் கடந்த வாரம் தெரிவித்தது.

அவற்றில் 17 நிகர் நிலைப் பல்கலைக் கழகங்கள் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ளன.

அரசின் முடிபை எதிர்த்து, சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களின் சார்பிர் மேல் முறையீடு செய்யப்பட்டதற்கு அமையவே அந்த வழக்கு திங்கட்கிழமை உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது நிகர் நிலைப் பல்கலைக் கழகங்களின் தற்போதைய நிலை தொடரவேண்டும் என நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்களை கௌரவிக்கும் வகையில் பத்ம விருதுகள் அறிவிப்பு

## இளையராஜா, ஏ.ஆர் ரஹ்மானுக்கு பத்ம பூஷண் விருது



(புதுடில்லி)

மருத்துவம், இலக்கியம், அறிவியல், கலை, விளையாட்டு, சமூக சேவை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்களை கௌரவிக்கும் வகையில் இந்தியாவின் மிகப்பெரிய விருதான பத்ம விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் குடியரசு தினத்தையொட்டி சாதனை படைத்தவர்களை கௌரவிக்கும் வகையில் நாட்டின் இரண்டாவது பெரிய விருதான பத்ம விபூஷண், பத்ம பூஷண் மற்றும் பத்மஸ்ரீ விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பத்ம விபூஷண் விருது நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி வெங்கடராமன் இராமகிருஷ்ணன் உட்பட 6 பேருக்கு வழங்கப்படுகிறது.

அதுபோலவே பத்ம பூஷண் விருதுகள் இசையமைப்பாளர்கள் இளையராஜா, ரஹ்மான் உள்ளிட்ட 43 பேருக்கும் பத்மஸ்ரீ விருதுகள் சி.பி.ஐ, முன்னாள் இயக்குநர் கார்த்திகேயன் உள்ளிட்ட 81 பேருக்கும் வழங்கப்படுகிறது. அதன் விபரம் வருமாறு,

அறிவியில் மற்றும் பொறியியற்துறையில் சிறப்பாகச் செயற்பட்ட விஞ்ஞானி வெங்கடராமன் இராமகிருஷ்ணன், மருத்துவத்துறையில் சிறப்பாகச் செயற்பட்ட டாக்டர் பிரதாப் சந்திர ரெட்டி மற்றும் றிசேர்வ் வங்கி முன்னாள் ஆளுநர் வேணுகோபால் ரெட்டி, கலைத்துறையில் ஆற்றிய சேவைக்காக மிருதங்க வித்துவான் உமையாள்புரம் சிவராமன் மற்றும் இப்ராஹீம் அல்காசீ, யோரா சீகல் ஆகியோருக்கு பத்ம விபூசண் விருதுகள் வழங்கப்படுகின்றன.

இசையமைப்பாளர்கள் இளையராஜா, ரஹ்மான், நடிகர் அமீர்ஹான் மற்றும் ராம்குமார், உஸ்தாத் சுல்தான்ஹான், மல்லிகா சாராபாய் ஆகியோருக்கு கலைத்துறையில் சிறப்பாகச் செயற்பட்டதற்காகவும் அறிவியல் மற்றும் பொறியியல் துறையில் சிறப்பாகச் செயற்பட்ட விஞ்ஞானி ஆரோக்கியசாமி, ஜோசப் பால்ராஜ் உட்பட 43 பேருக்கு பத்ம பூஷண் விருதுகள் வழங்கப்படுகின்றன.

நடிகை ரேகா, இராகவன் ஆகியோருக்கு கலைத்துறையிலும் பொது நிர்வாகத் துறையில் சிறப்பாகச் செயற்பட்ட கார்த்திகேயன், கல்வி மற்றும் இலக்கியத்தில் சிறப்பாகச் செயற்பட்ட அரவிந்த்குமார், கல்வித்துறையில் சேவையாற்றிய திருமதி இராஜலட்சுமி பார்த்தசாரதி, எழுத்தாளர் ரங்கநாதன் பார்த்தசாரதி ( இந்திரா பார்த்தசாரதி, மருத்துவத்துறையைச் சேர்ந்த ரமணாராவ், ஜெலகண்டபுரம் இராமசாமி கிருஷ்ணமூர்த்தி, அகர்வால், கோபிநாத், அறிவியல் மற்றும் பொறியியல் துறையைச் சேர்ந்த சொர்ண சுந்தரம், விஜயலட்சுமி ரவீந்திரநாத், சமூக சேவையில் கங்காரமணி, விளையாட்டுத்துறையில் கார்ப்பந்தையவீரர் நரேன் கார்த்திகேயன், பட்மின்டன் வீராங்கனை சயினா நெக்வால், குத்துச் சண்டை வீரர் விஜேந்தர் சிங், கிரிக்கெட் வீரர் வீரேந்திர சேவாக், ஹொக்கி வீரர் இக்னேஸ் திர்கி மற்றும் தொழில் துறையில் மனோகரன், வேணு சீனிவாசன் உட்பட 81 பேருக்கு பத்மஸ்ரீ விருதுகள் வழங்கப்படுகின்றன.

ஆனால் மிகவும் உயரிய விருதான பாரத ரத்னா விருது ஒருவருக்கும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### நோபல் அறிஞர் நெகிழ்ச்சி

எனது பணிக்கு கிடைத்த அங்கீகாரம் நாட்டின் மிகப்பெரிய விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்து விஞ்ஞானி வெங்கடராமன் இராமகிருஷ்ணன் கூறியதாவது, நான் பிறந்த நாட்டில் எனக்கு மிகப்பெரிய விருது வழங்கப்படுவது நெகிழ்ச்சியையும் கௌரவத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

எனது பணிக்குக் கிடைத்த அங்கீகாரமாக நான் இதைக் கருதுகிறேன் என்றார். (2- 6)

# ஊடகவியலாளர் காணாமற்போனது ஆழ்ந்த கவலை தருகின்றது

## எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு

(கொழும்பு)

தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் பதற்றங்களுக்கு மத்தியில் அரசை விமர்சனம் செய்த அரசியல் ஆய்வாளர் பிரகீத் எக்நலிகொட தலைநகரில் காணாமற் போயுள்ளது மிகவும் கவலை தருகின்றது என எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது மேலும் தெரிவித் துள்ளதாவது,

காணாமற்போன ஊடகவியலாளரை கண்டறிவதற்கு பொலிசார் அதிக முயற்சி களை மேற்கொள்ள வேண்டும். அதற்கு அவர்கள் அதிக பொலிசாரை ஈடுபடுத்த வேண்டும்.

தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் பதற்றங்களுக்கு மத்தியில் அரசை விமர்சனம் செய்த அரசியல் ஆய்வாளர் தலைநகரில் காணாமற்போயுள்ளது மிகவும் கவலை தருகின்றது.

எக்நலிகொட காணாமற்போனது தொடர் பில்தான் காவல்துறையினரிடம் முறைப்பாடு செய்துள்ளதாக அவரின் மனைவி தெரி வித்துள்ளார்.

இரு பிரதான வேட்பாளர்களையும் ஒப் பிட்டு அவர் கடந்த வாரம் அரசியல் ஆய்வு ஒன்றை எழுதியிருந்ததாகவும் அதனைத் தொடர்ந்து அவருக்கு அச்சுறுத்தல்கள் விடுக் கப்பட்டதாகவும் அவருடன் பணியாற்றும் ஊடகவியலாளர் ஒருவர் எம்மிடம் தெரிவித் துள்ளார்.

எக்நலிகொட எதிர்க்கட்சிகளுக்கு ஆதர வானவர். சிங்கள மொழியில் வெளியிடப்பட்ட அந்த ஆய்வு தொடர்பாகவே அவர் காணா மற்போயிருக்கலாம் என தான் அஞ்சுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார் என அது மேலும் தெரிவித்துள்ளது.

சிரட மற்றும் லங்கா ஈ.நியூஸ் ஆகியவற் றின் ஊடகவியலாளரான எக்நலிகொட கடந்த ஞாயிறு 9.00 மணியளவில் அலு வலகத்தில் இருந்து வீட்டுக்குச் சென்றபோது காணாமற்போயுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 3ஆம் திகதியும் எக்நலிகொட கடத்தப்பட்டு விடுவிக்கப்பட் டிருந்தார்.

எனினும் தற்போது தன்னை யாரோ பின்தொடர்வதாக தான் கருதுவதாக அவர் தனது நண்பரிடம் சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தது இங்கு குறிப்பிடத் தக்கது என்று மேற்படி எல்லைகளற்ற ஊடக அமைப்பின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள் ளது. (2-6)

# இருபது வருடங்களுக்குப் பின் புத்தளம் - மன்னார் வீதி திறப்பு

(கொழும்பு)

புத்தளத்திலிருந்து மன்னாருக்கான வீதி 20 வருடங்களின் பின்னர் கடந்த ஞாயிற்றுக் கிழமை திறந்துவைக்கப்பட்டது.

கடற்படையினர் புனரமைத்த இந்தப் பாதை பொதுமக்களின் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கென திறந்துவிடப்பட்ட தாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.

மன்னாருக்கான குறுக்கு வீதியாகவுள்ள இவ்வீதி மூடப்பட்டிருந்தமையால் மன்னார் செல்லப் பயணிகள் நீண்டதூரப் போக்கு வரத்தை மேற்கொள்ள நேரிட்டது.

தற்போது இவ்வீதித் திறப்புடன் மன்னா ருக்கான போக்குவரத்துத் தூரம் சுமார் 60 கிலோ மீற்றர் வரை குறைந்துள்ளதாக ஆளு நர் குறிப்பிட்டார்.

அத்துடன் முசலி, சிலாவத்துறை, அரிப்பு போன்ற பிரதேசங்களில் மீள்குடி யேற்றப்பட்ட மக்களின் போக்குவரத்து நடவ டிக்கைகள் மேலும் இலகுவாகியுள்ளது. (2-6)

# கட்சி மாறுவது தொடர்பான செய்திகளில் உண்மையில்லை

## கே.டி. லால்காந்த தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணையவுள்ளதாக வெளியான வதந்திகளில் உண்மையில்லை என ஜே.வி.பி. கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் கே.டி. லால்காந்த தெரிவித் துள்ளார்.

லால்காந்த ஜே.வி.பி.யிலிருந்து விலகி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து கொள்ளவுள்ளதாக நேற்று முன்தினம் பரவலாக செய்திகள் வெளியாகின.

எனினும் இந்தச் செய்திகளில் எவ்வித உண்மை யுமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப் பின் சிரேஷ்ட உறுப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக வெளியான தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என அவர் தெரிவித்துள்ளார். (2-6)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## மிளகு

Botanical Name- Piper nigrum
Family- Piperaceae
Engl- Black pepper
Sinh- Gammiris

மிளகு தாவரம் தென்மேற்கு இந்தியா வினைச் சேர்ந்தது. உலகின் வெப்பமண்ட லப் பகுதிகளிலும் பயிரிடப்படுகின்றது. பண்டைய காலந்தொட்டு பயிரிடப்படும் ஏறுகொடித் தாவரமாகும். இது நறுமணப் பொருளாகவும், மருந்தாகவும் பயன்படுத் தப்பட்டு வருகின்றது.

கெட்டியான தண்டுடைய பல பருவக் கொடி; கணுக்களிலிருந்து தோன்றும் பற்று வேர் மூலம் படருகின்றன. இலைகள் பெரியவை, அகன்றவை, மலர்கள் நுண் ணியவை; ஸ்பைக் எனும் மஞ்சரி அமைப்பில் காணப்படும். பெரும்பாலும் ஈரில்லம் உடையவை (Dioecious) பெண் மலர்களின் மகரந்த தாள்கள் காணப்படுவ தால் அவற்றில் மற்றும் கனிகள் தோன்றும். கனிகள் கோள அல்லது முட்டை வடிவின. நன்கு கனிந்த நிலையில் சிவப்பு நிறமுடை யவை; விதைகள் கோள வடிவானவை; முளை சூழ்தசை கடினமானது; விதையுறை மெல்லியது; கனிகள் இலையுதிர் காலத்தில் தோன்றுகின்றன.

**100 கிராம் உலர் மிளகுக் கனியிலுள்ள சத்துக்கள்:**

ஈரலிப்பு - 13.2 கிராம்
புரதம் 11.5 கிராம்
கொழும்பு 6.8 கிராம்
காபோவைதரேற்று 49.2 கிராம்
நார்ச்சத்து 14. 9 கிராம்
கல்சியம் 460 மி.கி.
பொஸ்பரஸ் 198 மி.கி.
இரும்புச்சத்து 16. 8 மி.கி.
கரோட்டீன் 1080 மைக்குரோகிராம்
நியோசின் 1.4 மி.கி.

**பரம்பலும் இனவிருத்தியும்:**

யாழ். மாவட்டத்தில் இனம்காணும் பொருட்டும் சில இடங்களில் பயிரிடப்படு கின்றது. கணுக்களில் இருந்து தோன்றும் பற்றுவேர் பதியன்கள் மூலம் இனவிருத்தி செய்யலாம். இதன் உலர்கனிகளே மிளகு ஆகும்.

**மருத்துவப் பயன்கள்:**

● மிளகையும், தும்பைப் பூவையும் சம அளவு எடுத்துச் சேர்த்து அரைத்து மிளகளவு மாத்திரையாக்கி உலர்த்தவும். இதில் 2-3 சாப்பிட்டு வெந்நீர் குடிக்க குளிருடன் கூடிய காய்ச்சல் குணமாகும்.

● ஆஸ்மா நோயாளர்களின் 100 கிராம் வில்வம் இலைத்தூளுடன் 10 கிராம் மிளகுத் தூள் சேர்த்து நாளும் 5 கிராம் தேனில் சாப்பிட்டு வர ஆஸ்மா குணமாகும்.

● தேவையான அளவு மிளகை எடுத்து வாணலியில் போட்டு வறுக்க வேண்டும். மிளகிலிருந்து தீப்பொறி பறக்கும் வரை



வறுத்துக் கொண்டே இருக்க வேண்டும். மேலும் வறுத்தால் மிளகு சாம்பலாக நீர்த்துப்போகும். இவ் மிளகுச் சாம்பலை தேங்காய் எண்ணெய்யுடன் கலந்து சொறி - சிரங்கு உள்ள பகுதிகளுக்கு நன்றாகப் பூச சிரங்கு குணமாகும்.

● ஏதாவது சிறிய விசங்களுக்கு அறுகை யும் (வேருடன்) மிளகையும் சம அளவு எடுத்து நீர் விட்டு குடிநீர் காய்ச்சி அருந்தலாம். உண விலுள்ள விசத்தன்மைகளையும் மிளகு நீக்கவல்லது.

● பெண்களுக்கு மாதவிலக்குக் காலங் களில் ஏற்படும் வயிற்று வலிக்கு 20 மிளகு, 4 வெள்ளைப்பூண்டுப் பற்கள், உத்தாமணி இலைக்கொழுந்து 5, இலைகளை அம் மியில் வைத்து சிறிது நீர் தெளித்து விழுதாகு மட்டும் நன்றாக அரைக்க வேண்டும். மாதவிடாயில் முதல் நாளில் பெண்கள் இந்த விழுதினை உட்கொண்டு சிறிது வெந்நீர் அருந்தவே ண்டும். இதே மருந்தை மூன்று நாட்கள் அன்றாடம் தயார் செய்து சாப்பிட மேற்படி வயிற்றுவலி அகலும்.

● உண்ட உணவு சரியாக ஜீரணமாக ததாலோ உடற்சூடு அதிகரிப்பதன் காரண மாகவோ வயிற்றுப் போக்கு இருப்பின் மிளகு 5 கிராம், வெள்ளைப் பூண்டு பற்கள் 3 கிராம், சீரகம் 3 கிராம், உப்பு சிறிதளவு எடுத்துக் கொள்ளவும். வெள்ளைப் பூண்டின் தோலை உரித்து எடுத்துக் கொண்டு மற்றப் பொருட் களையும் சேர்த்து சிறிது நீர்விட்டு மைபோல அரைத்து இரண்டு சமபங்காக்கி காலை யிலும், மாலையிலும் உட்கொள்ள வேண் டும். அஜீரணம் அல்லது உஷ்ணம் காரணமாக ஏற் பட்ட வயிற்றுப் போக்கு தணியும்.

● கண் எரிவிற்கு 5 கிராம் மிளகு, 50 கிராம் பொன் னாங்கண்ணி இரண்டடையும் சிறிது பால்விட்டு மைபோல அரைத்து தலை யில் நன்றாக தேய்த்து 5 நிமிட நேரத்தின் பின் இளஞ்சூட்டு நீரில் தலை முழுகி வர கண்ணெரிவு தீரும்.

உணவுக்கால் சம்பந்தமான பொதுவான நோய்களான வயிற்றுப் பொருமல், பசியின்மை, மந்தம், உடல்வலி, குமட்டல் போன்ற நிலைமைகளில்,

மிளகு -200 கிராம்
சுக்கு (வேர்க்கொம்பு) 25 கிராம்
வெந்தயம் 25 கிராம்
கொத்தமல்லி 25 கிராம்
கடுகு 25 கிராம் என்னும் அளவில் எடுக்க வேண்டும்.

இதில் மிளகை தூய நீரில் கழுவி நிழலில் உலர்த்தி மண்சட்டியில் போட்டு சிறிது நெய்யை விட்டு இளம் வறுவலாக வறுத்து எடுத்துக்கொள்ளவும் சுக்கை தோல் நீக்கி ஒன்றிடன்டாகத் தட்டி மண சட்டியில் சிறிது நெய்யை விட்டுச் சிவக்க வறுத்து எடுத்துக் கொள்ளவும்

வெந்தயத்தைத் தூய நீரில் கழுவி நிழலில் உலர்த்தி முன்போல் நெய்யில் சிவக்க வறுத்து எடுத்துக் கொள்ளவும். கொத்தமல்லியை உடைத்து மண் சட்டியில் சிறிது நெய்யைவிட்டு சிவக்க வறுத்து எடுத்துக் கொள்ளவும். கடுகைப் பிசைந்து நீரில் கழுவி நிழலில் உலர்த்தி நெய்விட்டு நன்றாக வறுத்து எடுத்துக் கொள்ளவும். எல்லாச் சரக்குகளையும் ஒன்றாகப் போட்டு நன்றாக இடித்து சிறிய கண்ணுடைய அரிதட்டில் அரித்து சேகரித்து வைத்துக் கொள்ளவும். சுடு சோற்றில் தேவையான அளவு போட்டு சிறிது நெய்யும் சேர்த் துண்ண மேற்கூறிய நோய்கள் அகலும்.

**குறிப்பு** : இவ்முறையை உங்கள் சமை யலறையில் தயாரித்து வைத்து தினமும் பயன்படுத்தி ஆரோக்கியத்தை தக்க வைத்துக்கொள்ள முடியும்.

தும்மல், இருமலுக்கு ஒரு சுத்தமான சட்டியை அடுப்பில் வைத்து காயவிட்டு அதில் கொஞ்சம் மிளகுகளைப் போட்டு நன்கு வறுக்க வேண்டும். மிளகு சிவந்து கருகி தீப்பொறி பறக்கும் சமயத்தில் ஒரு டம்ளர் தண்ணீரை அதிலிட்டு மூடி நன்றாகக் கொதிக்கவிட்டு பின் இறக்கிவிடவேண்டும். அந்நீரில் ஒரு டம்ளரில் அரைவாசியை எடுத்து சிறிது சீனி சேர்த்து காலையில்

**டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)**
**சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம், கைதடி.**

அருந்தவேண்டும். அதேபோல் மறுபாதியை மாலையில் அருந்த மேற்படி இருமலுக்கு சிறந்த நிவாரணமாகும்.

● வறட்டு இருமலுக்கு 1 டம்ளர் பசுப்பாலில் கொஞ்சம் மிளகை தட்டிப்போட்டு நன்றாக கொதிக்க. வைத்து எடுத்து சிறிது பனங்கற்கண்டும் சேர்த்து அருந்த வறட்டு இருமல் தீரும்.

● கசநோய் உள்ளவர்கள் 100 கிராம் மிளகை உரலில் நன்றாக இடித்து அரித்து வைத்துக் கொள்ளவும். பசுநெய் 10 மில்லி உடன் 1/2 தேன் கரண்டி மிளகுத்தூளை சேர்த்துக் குழைத்து காலை, மாலை அருந்த வேண்டும். தொடர்ந்து 5 நாட்கள் எடுக்க லாம். இவ்வாறு 5 நாட்கள் இடைவெளிவிட்டு பின்பு 4, 5 முறை பயன்படுத்தலாம்.

● மிளகிலை, வாதமடக்கி இலை, நொச் சியிலை இலைகளைச் சேர்த்து கொதிக்க வைத்த நீரை கால் வீக்கம், வலி, அடிபட்ட வீக்கம் முதலியவை மீது ஒற்றடம் இடலாம்.

சட்டி சுட்டதடா! கை விட்டதடா!
புத்தி கெட்டதடா! நெஞ்சைத் தொட்டதடா!!
-கவிஞர் கண்ணதாசன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## உன்னைச் சொல்லிக் குற்றமில்லை என்னைச் சொல்லிக் குற்றமில்லை

ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடிந்து விட்டது. முடிவுக்கான காத்திருப்பு மட்டுமே மிச்சம். வாக்களித்த வாக்காளப் பெருமக்கள் தங்களது பணியைச் செம்மையாகச் செய்தார்களா? இல்லையா? என்ற கேள்விகளுக்கெல்லாம் இனி இடமில்லை.

தேர்தல் முடிபுகள் வெளிவருகின்ற போது எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான்.

அரசியல்வாதிகள் ஒவ்வொருவரும் நடந்து கொண்ட விதம் நினைக்கவே நெஞ்சம் கருகுகிறது.

ஆளுக்கொரு பக்கம். தேர்தலோடு பணம் உழைக்கும் கயமைத்தனம். அப்பாவிப் பொது மக்கள், ஏதும் அறியாதவர்களாக வாழ்கின்றனர். இதுவே எங்கள் வாழ்வு என்ற பரிதாபம்.

அதிலும் யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் எதிலும் நம்பிக்கை அற்றவர்களாக-ஏதோ வாழ்கின்றோம் என்ற பற்றில்லா நிலையில் காலம் கழிக்கின்றனர்.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் மிகக் குறைந்தளவான மக்களே வாக்களித்தனர் என்ற செய்தி வேதனைக்குரியது.

தேர்தல் நேரத்தில் நடந்த சில சம்பவங்கள் வாக்களிப்பை குறைத்திருக்கலாம் என்ற ஊகங்களும் உண்டு.

எதுவாயினும் யாழ்ப்பாண மண் குண்டு வெடிப்பு கலாசாரத்தில் இருந்து மீளமுடியாதென்பதையே இந்தச் சம்பவங்கள் காட்டி நிற்கின்றன.

இத்தகைய சம்பவங்களுக்குப் பழக்கப்பட்டும், தேர்தலில் வாக்களிக்க வேண்டும் என்ற மனநிலை அற்றும் வாழக்கூடிய ஒரு மக்கள் சமூகத்தை நாமாகவே உருவாக்கிவிட்டு, பின்பு எங்களின் தேவைகளுக்காக மக்களை நாடிச் சென்று எங்கள் எதிர்பார்ப்பை நிறைவேற்றிக் கொள்ளலாம் என யாரேனும் நினைப்பார்கள் ஆயின் அது மிகப் பெரும் தவறாக அமையும்.

யாரும் தேர்தலில் போட்டியிட உரிமை உண்டு. அதேபோல் எவருக்கும் வாக்களிக்கும் உரிமையையும் மக்கள் கொண்டுள்ளனர்.

பொதுமக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்ற முடிபுகளை எடுப்பதற்காகவே தேர்தல் பிரசாரங்களும், தேர்தல் விஞ்ஞாபனங்களும் வெளியிடப்படுகின்றன.

பொதுச் சேவையாளர்களை மக்கள் நிச்சயம் இனங்கண்டு கொள்வர். இதில் எந்த வேட்பாளரும் ஐயங்கொள்ளத் தேவையில்லை.

அதேநேரம் வேட்பாளர்கள் அர்பணிப்புடன் சேவையாற்றுபவர்களாக-மக்கள் பணியில் தங்களைச் தியாகம் செய்பவர்களாக இருக்க வேண்டும்.

மக்களின் வாக்கைப் பெறுவதற்கு இது மிகவும் அவசியமானதாகும்.

# மக்களை வாக்களிக்கவிடாமல் தடுக்கும் செயல்கள் அநாகரிகமானது

## ஸ்ரீகாந்தா எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாண மாவட்டத்தில் குறிப்பாக யாழ். நகரிலும் அதன் சுற்றுப்புறங்கள் சிலவற்றிலும் நேற்று முன்தினம் இரவும் நேற்றும் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் அநாகரிகமானவை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர் என். ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

மக்களை வாக்களிக்க விடாமல் தடுப்பது போன்ற செயல்களைவிட மோசமான அரசியல் காட்டுமிராண்டித் தனம் இருக்கமுடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தின் மீதும் ஆதரவாளர் ஒருவருடைய வீட்டின் மீதும் நடத்தப்பட்ட தாக்குதலுக்கும் மற்றும் வாக்காளர்களைப் பயமுறுத்தும் பல்வேறு சம்பவங்களுக்கும் அவர் தனது கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இச்சம்பவங்கள் அனைத்தையும் மக்கள் வெறுக்கின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (2-4)

## தேர்தல் முடிபுகளை வெளியிட 17 ஊடகங்களுக்கு அனுமதி

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் முடிபுகளை வெளியிட 17 முக்கியமான இலத்திரனியல், அச்சு ஊடகங்களுக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல் திணைக்களம் கூறியுள்ளது. தவறான செய்திகள் வழங்குவதனைத் தடுத்தல், மக்களைத் திசை திருப்பி கலவரங்களைத் தூண்டுதல் போன்ற செயற்பாடுகளுக்காக இந்தக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணையாளர் கூறியுள்ளார்.

இந்த அனுமதி பெற்ற ஊடகங்கள் பிற நிறுவனங்களுக்குச் செய்திகளை வழங்க முடியாது எனவும் கூறியுள்ள ஆணையாளர் செய்திகளை வெளியிட விரும்புவோர் முறைப்படி அனுமதிகளைப் பெறவேண்டும் என்றும் கூறியுள்ளார். (2-6)

## சந்திரிகா தமது பெற்றோரை அவமதித்துவிட்டார்

### மைத்திரிபால சிறிசேனா

(கொழும்பு)

சந்திரிகா குமாரதுங்க, பொன்சேகாவை ஆதரித்ததன் மூலம் தனது பெற்றோரை அவமதித்துள்ளதாக இலங்கை சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனா தெரிவித்துள்ளார்.

சில நாட்களுக்கு முன்னர் மவுண்ட் லாவண்யா ஹோட்டல் ஒன்றில் பத்திரிகையாளர்களிடம் பேசிய சந்திரிகா தாம் இரு பிரதான வேட்பாளர்களையும் ஆதரிக்கப் போவதில்லை எனவும் இத்தேர்தலில் தாம் நடுநிலையாக இருக்கப்போவதாகவும் கூறியிருந்தார்.

ஆனால் திடீரெனகடைசி நேரத்தில் சரத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளமையானது அவர் தனது பெற்றோர்களை அவமதிக்கும் செயலெனவும் சந்திரிகாவின் முடிபைத் தாம் கண்டிப்பதாகவும் ஊடகவியலாளர்களுக்கு விடுத்த அறிக்கையில் மைத்திரிபால சிறிசேனா மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-6)

## அமெரிக்காவுக்காக உளவு பார்த்த 7 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றம்

வடமேற்குப் பாகிஸ்தானில் அமெரிக்காவுக்காக உளவு பார்த்த குற்றச்சாட்டில் 7 பேருக்கு தலிபான் போராளிகளால் கடந்த ஞாயிற்றுக்கிழமை மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதேசமயம் அன்றைய தினம் மேற்படி பிரதேசத்தில் இடம்பெற்ற தெருவோரக் குண்டுவெடிப்பில் ஒரு படை வீரர் பலியானதுடன் இருவர் காயமடைந்துள்ளனர்.

மரண தண்டனை நிறைவேற்றப்பட்டவர்களில் 5 பேரின் சடலங்கள் வட வாஸிரிஸ்தானின் பிரதான நகரான மிரான்ஷாஹின் தெற்கே 35 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள கும்சரோபி எனும் இடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

மேற்படி பிரதேசத்தில் தலிபான் போராளிகளுக்கு எதிராக படையினரால் இராணுவ நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆறாவது சடலம் மிரான்ஷாஹிலிருந்து தென்கிழக்கே 10 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள குதாப்கெல் பிரதேசத்திலும் பிறிதொரு சடலம் மிர் அலி பிராந்தியத்திலுள்ள ஹெய்ஸோர் கிராமத்திலும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படையினருக்காக உளவு பார்த்த குற்றச்சாட்டில் கடந்த இரு வருடகாலப் பகுதியில் பலர் தலிபான் போராளிகளால் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6)

# கண்ணப்பநாயனார் தாள்பணிந்து கடைத்தேறுவோம்

வேடாதிபதி யுடுப்பூர் வேந்தனாகன்
விளங்கிய சேய் திண்ணனார் கன்னி வேட்டைக்
காடதில்வாய் மஞ்சனடுங் குஞ்சிதரு மலருங்
காய்ச்சினி மென் றிடுதசையுங் காளத்தி யார்க்குத்
தேடருமன் பினிலாறு தினத்தளவு மனிப்பச்
சீறுசிவ கோசரியுந் தெளிய விழிப்புண்ணீ
ரோடவொரு கண்ணப்பி யொருகண்ணப்ப
வொழிக வெனு மருள் கொடரு குற நின்றாரே.

திருத்தொண்டர் புராண சாரம்

கண்ணப்ப நாயனாரைப் பற்றி பேசிய அருளாளர்கள் பலர். அவற்றுள் சிலர் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், திருநாவலூரார், மாணிக்கவாசகர், நம்பிகாட நம்பி, நக்கீரர், கல்லாடதேவர், நம்பியாண்டார் நம்பி, பட்டினத்தார், குமரகுரு சுவாமிகள், திருவாரூர் சிதம்பர மும்மணி, காசிக்கலம்பகம் ஆகியோரில் மாணிக்கவாசகரின் திருவாசகத்தை நாமும் ஓதி அவர் குருபூசை தினத்தை அவரை மனதில் இருத்தி வழிபட்டு பேரின்பப் பெருவாழ்வு பெறுவோமாக.

**இன்று கண்ணப்பநாயனார் குருபூசை தினமாகும்**

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்.
என்னப் பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான் கருணைச்
கண்ணப் பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

*K. சிவபாலன்*

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## மக்கள் தொண்டே மகேசன் தொண்டு



நம்மை பற்றியே முதலில் நினைத்துக்கொள்ளும் சுயநலம் தான் மிகப் பெரிய பாவமாகும். "நான்தான் முதலில் சாப்பிடுவேன், நான்தான் மற்றவர்களைவிட அதிக செல்வம் பெற்றவனாக இருப்பேன், எல்லாவற்றையும் நானே வைத்திருக்க வேண்டும்" என்றும் "மற்றவர்களுக்கு முன்பு நான்தான் சொர்க்கம் போவேன். மற்றவர்களுக்குக் கிடைப்பதற்கு முன்பு நான் முத்தியை அடைவேன்" என்றும் நினைப்பவன்தான் சுயலநலவாதி ஆவான்.

"நான்தான் கடைசி ஆளாக இருப்பேன், சொர்க்கத்திற்குப் போவதைப் பற்றியும் நான் பொருட்படுத்தவில்லை. நரகத்திற்குச் செல்வதன் மூலமாக என்னுடைய சகோதரர்களுக்கு என்னால் உதவி செய்ய முடியுமானால் நரகத்திற்கு செல்லவும் நான் தயாராக இருக்கிறேன்" என்று சுயநலம் இல்லாதவன் சொல்கிறான்.

# ராஜீவ் கொலை வழக்கில் சிக்கியவர்களை குடும்பத்தினர் மன்னித்தாலும் காங்கிரசார் மன்னிப்பதாயில்லை



ஆயுள் தண்டனை என்பதை 14 ஆண்டுகளாக நீதிமன்றங்கள் நிர்ணயித்திருக்கின்றன. ஆனால் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு தண்டிக்கப்பட்டவர்கள் விடயத்தில் இந்த கால வரையறையை நீதிமன்றங்களே மறந்து விடுவது பெரிய முரண்பாடு.

ராஜீவ் கொலை வழக்கில் கைதாகி வேலூர் சிறையில் இருக்கும் நளினிக்கு முதலில் மரண தண்டனை விதிக்கப்பட்டது. உச்ச நீதிமன்றமும் இதை உறுதி செய்தது. அவரை மன்னித்து விட்டதாக ராஜீவ் குடும்பத்தில் கிட்டத்தட்ட அத்தனை பேரும் சொல்லிவிட்டார்கள். சோனியார் சொன்னார், பிரியங்கா காந்தி நேரிலேயே வந்து நளினியைப் பார்த்து விட்டு சொன்னார். சோனியாவின் அறிவிப்பு வெளியான பிறகு நளினியின் கருணை மனுவை பரிசீலித்து அவரது மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றுமாறு 2000ஆம் ஆண்டில் பரிந்துரை செய்தது கருணாநிதி தலைமையிலான அரசு. அதை ஏற்று ஆளுநரும் உத்தரவு பிறப்பித்தார்.

நளினி உட்பட ராஜீவ் கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற 11 பேர் கிட்டத்தட்ட 19ஆண்டுகளைத் தாண்டியும் சிறையில் இருக்கிறார்கள். ஆனால் தண்டனைக் காலம் முடிந்தும் அவரை வெளியில் விடுவதாக இல்லை. 3 ஆண்டுகளுக்கு முன் விடுதலை கோரி நளினி கொடுத்திருந்த மனுவை தண்டனைகளுக்கான அறிவுரைக்குழு நிராகரித்தது. விடயம் நீதிமன்றுக்குப் போன போது மாநில அரசு அமைத்த அறிவுரைக் குழுவே சட்டப்படியானது இல்லை. புதிய குழுவை அமைத்து அவரது மனுவை பரி சீலனை செய்யுங்கள் என்றது நீதிமன்றம்.

அதன் பிறகு தமிழக அரசு இதில் ஆர்வம் காட்டவில்லை. மத்திய அரசைக் கேட்காமல் இந்த விடயத்தில் எங்களால் முடிவெடுக்க முடியாது. அவரது வழக்கை சி.பி.ஐ. தானே விசாரித்தது என்று தட்டிக்கழிக்கப்பார்த்தது. மத்திய அரசோ, இந்த விடயத்தில் நாங்கள் சொல்வதற்கு ஒன்றுமில்லை என்று பின்வாங்கிவிட்டது. நீதிமன்றங்களும் இந்த விடயத்தில் தெளி வான உத்தரவுகள் பிறப்பிப்பதில்லை.

இப்போது நீதிமன்ற ஆலோசனை அடிப்படையில், இரண்டாவதாக ஒரு அறிவுரைக் குழுவை அமைத்திருக்கிறது தமிழக அரசு. இந்தக் குழுவினர். நளினியின் நிலை குறித்து சிறையில் -ஆய்வு நடத்தியிருக்கிறார்கள். இந்த அறிக்கை அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பிறகு நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் இப்போதே, நளினியை விடுதலை செய்யுமாறு இந்தக் குழு பரிந்துரைக்கப் போகிறது என யூகங்களாக வெளியான தகவல்களை வைத்து எதிர்ப்புகள் கிளம்பி விட்டன.





பொதுவாக இப்படித் தரப்படும் அறிக்கைகள் மீது அரசு நடவடிக்கை எடுப்பதற்கு காலக்கெடு என எதுவும் இல்லை. நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்னர் அனுப்பப்பட்ட அறிக்கைகளே மாநில உள் துறை அதிகாரிகளின்மேசைகளில் உறங் குகின்றன.

இந்நிலையில் எதிர்ப்புகள் கிளம்பாமல், நளினியின் விடுதலையும் நிச்சயமற்றுப்போகும். ராஜீவ் குடும் பத்தினரே மன்னித்து விட்டபோதும் ராஜீவ் கொலை வழக்கில்சிக் கியவர்களை காங்கி ரஸ்காரர்கள் மன்னிப்பதாக இல்லை. அவர்களை விடுத்தால் தன்னையும் அவர்களின் கூட்டாளியாக இளங் கோவன், சுப்பிர மணிய சுவாமி போன்றவர்கள் சித்தரிக்கக் கூடும் என்ற பதைப்பில் முதல்வர் என்ன முடிவெடுக்கப் போகிறாரோ!?

## நளினியின் விடுதலை :சட்டமும் நீதியும்

ராஜீவ் கொலையை திட்டமிட்டதாக சி. பி.ஐ குற்றம் சாட்டிய விடுதலைப்புலிகள் அமைப்பே இப்போது கிட்டத்தட்ட இல்லாமல் போய்விட்டது. அத்தோடு பலர் மீது வலுவான சந்தேகம் இருந்தும் அவர்களை விசாரிக்காமல் விட்டோம் என சி.பி.ஐ. விசாரணைக் குழுவில் இருந்த ரகோத்தமன் என்ற அதிகாரி இப்போது எழுதிய ஒரு புத்தகத்தில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத் திருக்கிறார்.

பொதுவாக தவறு செய்தவர்கள் திருந்தவும், புது மனிதர்களாக மாறவே சிறையில் தனிமை என்ற தண்டனை தரப்படுகிறது. சட்டமே இவ்வளவு தான் தண்டனை என முடிவு செய்த பிறகு, அது முடிந்ததும் வெளியில் விடுவது தானே முறை! அரசியல் காரணங்களுக்காக ஒருவரது தண்டனையை நீடிக்க வேண்டும் என்றால் நீதிமன்றம் எதற்கு?

# முத்துக்களின் சமுத்திரம் கவிதை நூல் விமர்சனம்




சுப்பிரமணியம் -மகேஸ்வரனுடைய ஆங்கில கவிதை நூல் முத்துக்களின் சமுத்திரம் Ocean of Pearls கவிதைக் குவியலாக வெளிவந்துள்ளது. இந்நூலை கலைவாணிக்கு அர்ப்பணமாகும் பெற்றோர் படங்களுடன் வெளியிட்டுள்ளார்.

இது இவருடைய இரண்டாவது கவிதைப் படைப்பாகும். கவிதைகள் யாவரும் புரிந்து கொள்ளக்கூடிய முறையில் சிந்தனையைத் தூண்டும் வகையில் சுவராஸ்சியமாக எழுதப்பட்டுள்ளது. யாழ். இந்துக்கல்லூரியின் சிரேஷ்ய ஆங்கில ஆசிரியரான சு.மகேஸ்வரன் சிறந்த ஆங்கில கவிதைப் படைப்பாளிகளில் ஒருவர் ஆவார். இலகு ஆங்கில நடையில் எழுதப்பட்ட கவிதைகள் சமகால நிகழ்வுகளையும் புகழ் பூத்த மனிதர்களையும் மஞ்சரியாகத் தொகுத்து தந்துள்ளது.

*கவிதைப் பூக்கள் சில-* இலங்கையில் அமைதிப் பேச்சு (Peace Talks in SriLanka)

*அர்த்தமில்லாமல் ஆரம்பமானது*
*அமைதிப் பேச்சு ஒருவர் பேசினார்,*
*இரண்டாமவருடன் மூன்றாமவர் மூன்-*
*அமைதிப்பேச்சு அமைதி யாகிவிட்டது.*
*ஆறாமறிவு அமைதியானதால்.*

*சிந்தனையைத் தூண்டும் மற்றொரு கவிதை-*

எங்கேஎன்கல்லறை(Where is my Tomp) கருவறைக்கும் கல்லறைக்கும் இடையில் தூரம் தெரியாமல் இக வாழ்வில் அல்லல் படும் மனிதன்.

மற்றொரு கவிதை- ஒபாமாவும் ஒசாமாவும் சமூக இலஞ்சம் ஊழலை படம் பிடித்துக் காட்டுகிறார். கீழ்வரும் கவிதை- பிச்சைக்காரன் ஆசை (Begger's Ambition)

*நான் பிச்சைக்காரன் – திருடனல்ல!*
*இரந்து கேட்கிறேன் –பிச்சை ;*
*மனிதர்கள் ஓடிக்கொண்டிருக்கிறார்கள்*
*இரந்தாவது தமது தேவையை நிறைவேற்ற*
*இவர்கள் என்னைப்பார்த்து பிச்சைக்காரன்*
*என்கின்றனர்.*

இவ்வாறான எண்ணற்ற கவிதைகள் பூத்துள்ள இந்நூலுக்கு பல்வேறு துறைசார் கல்விமான்கள் அணிந்துரை ,சிறப்புரை வழங்கி வாழ்த்தியுள்ளனர். நூலின் அட்டைப் படம் கைநிறைய பவளம் போல் அச்சிடப்பட்டுள்ளது. மாட்சிமைக்குரிய இரண்டாம் எலிசபெத் மகாரணியின் படங்களுடன் இந்நூர் வெளிவந்துள்ளது.

***சி.தியாகராசா***

# மகேஸ்வரனின் கவிதைகள்

## காலக்கருத்தின் கருப்பஞ்சாறு

மிக அண்மையில் வெளியான ஆங்கில கவிதை நூல் The Ocean of Pearls பற்றிய எனது கருத்தினை யாவருக்கும் குறிப்பாக பாடசாலை மாணவர்கள், ஆங்கில ஆசிரியர்கள், இலக்கிய ஆய்வாளர்களுக்குக் கூறுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

காலத்திற்கு ஏற்ற கவிதைகளாகவும் கவிநயம், கவிநடை, சொல்லாட்சி இவை மூன்றும் ஒருங்கே இணைந்து மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய காலக் கருத்தினை மிக எளிதில் விளங்கக் கூடிய வடிவில் கவித்துவம் மிக்கதாக Poetic Quality ஆக்கம் செய்து நூலாக வெளியிடுவதற்கு யாழ். இந்துக் கல்லூரி சிரேஷ்ட ஆங்கில ஆசிரியர் சு.மகேஸ்வரனின் தீவிரமான முயற்சியை பாராட்டுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

இத்தகைய நூல்கள் மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைவதை வரவேற்பதோடு அவற்றின் பயனை நாம் ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதே எனது அவா. ஆங்கில மொழியைக் கற்பதற்கும் விருத்தி செய்வதற்கும் உகந்த வழியில் இந்நூல் வெளியிடப்பட்டதையிட்டு மகிழ்ச்சியடைவதோடு மேலும் இதுபோன்ற நூலையும், ஆங்கில நாடகம், கட்டுரை, சிறுகதை போன்றவற்றையும் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு உகந்த வகையில் வெளியிடுவதற்கு மகேஸ்வரனுக்கு இறை ஆசி கிடைக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

ப.சங்கர்
முகாமையாளர், சம்பத் வங்கி,
யாழ்ப்பாணம்.

# வன்முறை சம்பவம் தொடர்பு புலம்பெயர் உறவுகள் பதற்றம்

(யாழ்ப்பாணம்)

நேற்றைய தினம் யாழ்ப்பாணத் தில் கைக்குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றதாக இலத்திரனியல் ஊடகங்கள் வெளியிட்ட செய்திகளைத் தொடர்ந்து புலம் பெயர்ந்தும் வெளி மாவட்டங்களில் வசிக் கும் யாழ். குடாநாட்டைச் சேர்ந்த மக்களிடையே பதற்றம் நிலவியதாக அறியப்பட்டுள்ளது.

இதனால் அவர்கள் தொலைபேசி வழியாக இங்கு வாழ்கின்ற தம் உறவுகளை நலன் விசாரித்த வண்ணம் இருந்ததை அறியக் கூடியதாக இருந்தது.

மேலும் இங்குள்ள உறவுகள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்ற அறிவுறுத்தல்களையும் தம்மால் கலந்து கொள்ள முடியாத ஏக்கத்தையும் வெளியிட்டதையும் அறியக் கூடியதாய் இருந்தது.

(2-6)

# தமிம் இக்பால் அதிரடிச் சதம்; பங்களாதேஷ் அணி பதிலடி



(மிர்பூர்)

தமீம் இக்பாலின் அதிரடியான சதத்தின் மூலம் பங்களாதேஷ் அணி நேற்றைய மூன்றாவது நாள் ஆட்டநேர முடிபில் அதன் இரண்டாவது இனிங்ஸில் 3 விக்கெட்டுக்களையிழந்து 228 ஓட்டங்களை எடுத்தது.

முன்னதாக தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 8 விக்கெட்டுக்களையிழந்து 544 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பங்களாதேஷிற்கு சுற்றுபயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் வெற்றி பெற்ற இந்திய அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ள நிலையில் தீர்க்கமான இரண்டாவதும் இறுதியுமான போட்டி கடந்த 24ஆம் திகதி மிர்பூரில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி முதலாவது இன்னிங்ஸில் 233 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்று முன்தினம் 2ஆம் நாள் ஆட்டநேர முடிபில் 5 விக்கெட்டுக்களை இழந்து 459 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந் நிலையில் மூன்றாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி தோனியின் சிறப்பான துடுப்பாட்டத்தின மூலம் முதலாவது இன்னிங்ஸில் 8 விக்கெட்டுக்களை இழந்து 544 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடை நிறுத்தியது.

இதில் டெண்டுல்கர் 143 ஓட்டங்களையும் ராகுல், டிராவிட் ஆட்டமிழக்காமல் 111 ஓட்டங்களையும் அணித்தலைவர் மகிந்திர சிங் தோனி 89 ஓட்டங்களையும் காம்பீர் 68, சேவாக் 56 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சாபீயுல் இஸ்லாம் 3 விக்கெட்டுக்களையும் சகிப் அல்ஹசன் 2 விக்கெட்டுக்களையும் மொகமெட் அஷ்ரபுல், ரகிபுல் ஹசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 311 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னணியில் இருந்த பங்களாதேஷ் அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்து 19 ஓட்டங்களை எடுத்த நிலையில் முதலாவது விக்கெட்டை பறிகொடுத்தது.

எனினும் இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த தமிம் இக்பால்-ஜுனைட் சிட்டிக் ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கி பங்களாதேஷ் அணியை மீட்டெடுத்தனர்.

இதில் தமிம் இக்பால் 49 பந்துகளில் அரைச் சதம் கடக்க பங்களாதேஷ் அணி 21.5 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது.


இந்த ஜோடியை பிரிக்க அணித்தலைவர் தோனி களத்தடுப்பில் பல வியூகங்களை வகுத்த போதும் பலனளிக்காமல் போக தமிம் இக்பால் 101 பந்துகளில் தனது இரண்டாவது டெஸ்ட் சதத்தை பூர்த்திசெய்தார்.

மறுமுனையில் சிட்டிக் 121 பந்துகளில் அரைசதத்தைக்கடக்க பங்களாதேஷ் அணி 47.5 ஓவர்களில் 200 ஓட்டங்களை எட்டியது. இந்த ஜோடி இரண்டாவது விக்கெட்டுக்காக 308 பந்துகளில் 200 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது ஜுனைட் சிட்டிக் 55 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து சகாடாட் ஹசன் களமிறங்க மறுமுனையில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய தமிம் இக்பால் 183 பந்துகளில் (18 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 151 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க பங்களாதேஷ் அணி 222 ஓட்டங்களை எடுத்து 3 ஆவது விக்கெட்டை இழந்தது.

இந் நிலையில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிபில் பங்களாதேஷ் அணி இரண்டாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்களை இழந்து 228 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சகாடாட் ஹசன், முகமெட் அஷ்ரபுல் ஆகியோர் தலா 2 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தனர். பந்துவீச்சில் சகீர்கான் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.



இப் போட்டியில் இன்னிங்ஸ் தோல் வியை தவிர்க்க பங்களாதேஷ் அணிக்கு 7 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 83 ஓட்டங்களை எடுத்தாக வேண்டும் போட்டியின் 4 ஆம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# மூன்றாவது போட்டியிலும் ஆஸி. வெற்றி; ஒருநாள் தொடரையும் இழந்தது பாகிஸ்தான்



(அடிலெய்ட் ஓவல்)

வைற்ரின் துல்லியமான பந்துவீச்சின் மூலம் அவுஸ்திரேலிய அணி மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் பாகிஸ்தான் அணியை வீழ்த்தி தொடரை 3:0 என்ற கணக்கில் தனதாக்கியது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுபயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 3 டெஸ்ட் 5 ஒருநாள் போட்டிகள் மற்றும் ஒரே ஒரு இருபது-20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் தொடரை அவுஸ்திரேலிய அணி 3:0 என்ற கணக்கில் கைப்பற்றியது. தொடர்ந்து நடைபெற்ற முதல் இரண்டு ஒருநாள் போட்டிகளிலும் அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்று தொடரில் 2:0 என்ற கணக்கில் முன்னிலையை பெற்றது.

இந்நிலையில் மூன்றாவது ஒருநாள் போட்டி நேற்று அடிலெய்ட் ஓவலில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி மார்ஷ், மைக்கெல் கிளார்க்கின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 286 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஷோன் மார்ஷ் 83 ஓட்டங்களையும் மைக்கெல் கிளார்க் 80 ஓட்டங்களையும் மைக்கெல் ஹசி 28 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்கள் அடங்கலாக 49 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் உமர் குல், நவீட் உல் ஹசன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் மொகமெட் ஆசிப், சயிட் அஜ்மல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 287 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி ஹரிஸின் பந்துவீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் 47.4 ஓவர்களில் 246 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்து 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்விய டைந்தது.

இதில் உமர் அக்மல் 59 ஓட்டங்களையும் கிட் அப்ரிடி 40 ஓட்டங்களையும் சல்மான்பட் 34 ஓட்டங்களையும் அலாம், சகீட் அல் ஹசன் ஆகியோர் தலா 33 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஹரிஸ் 10 ஓவர்கள் பந்து வீசி 43 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் மைக்கேய் 3 விக்கெட்டுக் களையும் வோட்ஷன், ஹயூரிச் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 3:0 என்ற கணக்கில் தனதாக்கியது.

இப்போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு திருப்புமுனையமைத்த ஹரிஸ் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

# அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் அரையிறுதிக்கு ஹெனின் தகுதி

(மெல்போர்ன்)


கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் மெல்போர்ன் நகரில் நடைபெற்று வருகிறது.

இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்றுக்காலை நடந்த காலிறுதி ஆட்டத்தில் முன்னாள் நம்பர் 1 வீராங்கனையான பெல்ஜியத்தின் ஜஸ்டின் ஹெனின் 19ஆம் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் நாடியாபெட்ரோவாவை எதிர்கொண்டார்.

இதில் ஹெனின் 7-6 (7-3),7-5 என்ற நேர் செட் கணக்கில் பெட்ரோவாவை அதிர்ச்சிகரமாகத் தோற்கடித்து அரையிறுதிக்கு நுழைந்தார்.

7 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் பெற்ற ஹெனின் 18 மாத ஓய்வுக்கு பின்னர் மீண்டும்களம் வந்துள்ளார். அவரது ஆட்டம் முத்திரை பதிப்பதாகவுள்ளது.

மற்றொரு காலிறுதியில் சீனாவின் ஜி ஜெங்கும் ரஷ்சியாவின் மரியா கிரிலென்கோவும் மோதினார்கள்.



இதில் சீன வீராங்கனை ஜி ஜெங் 6-1, 6-3 என்ற நேர் செட்கணக்கில் வென்றார். அரையிறுதி ஆட்டத்தில் ஹெனின்-ஜி ஜெங் மோதுகிறார்கள்.

இந்திய வீரர் லியாண்டர் பயஸ் இரட்டையர் மற்றும் கலப்பு இரட்டையர் பிரிவில் காலிறுதியில் நுழைந்துள்ளார்.

# வாக்காளர் டாப்பில் பெயரில்...

அரசாங்கம் இதனைப் பயன் படுத்தி மக்கள் மத்தியில் சந்தேகங்களை ஏற் படுத்தும் பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாகவும் மக்கள் அவற்றைக் கவனத்தில் கொள்ளாது வாக்களிப்பில் கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

அரசியல் யாப்பின்படி தனக்கு வாக்களிக்க உரிமையிருப்பதாகவும் இதனால் மக்கள் சந்தேகம் கொள்ள வேண்டாம் எனவும் சரத் பொன்சேகா கேட்டுக் கொண்டார்.

*ரணில் கருத்து*

அதேவேளை இதுகுறித்துக் கருத்து வெளியிட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, இலங்கையின் அரசியல் யாப் பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டி யிடும் உரிமை சரத் பொன்சேகாவுக்கு இருப் பதாக கூறியுள்ளார்.

இரண்டு முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டவர் என்ற முறையில் தான் சட்ட திட்டங்களை நன்கு அறிந்துள்ளதாகவும் இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுபவர் இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும் என்பதுடன் 30 வயதைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் எனவும் ரணில் கூறியுள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிராக அரசாங்கம் சேறுபூசும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. சரத் பொன்சேகாவுக்கு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக் கூடிய அனைத்துத் தகுதிகளும் இருக்கின்றன எனவும் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

*தேர்தல் ஆணையாளர் பதில்*

தன்னை வாக்காளராகப் பதிவு செய்யாவிட்டாலும் அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தடையில்லை எனத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் தேர்தல் சட்டத்தின்படி தேர்தலில் போட்டியிடுபவர் இலங்கைப் பிரஜையாக இருப்பின் அவர் வாக்காளராக பதிவு செய்யாவிட்டாலும் தேர்தலில் போட்டியிட உரிமையுள்ளது. அத்துடன் அவர் தேர்தலில் வாக்களிக்க வேண்டும் என்பது அவசியமற்றது.

இதனால் தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர் தன்னை வாக்காளராகப் பதிவு செய்யாதிருப்பினும் அவர் தேர்தலில் போட்டியிட்டுத் தெரிவு செய்யப்படுவதில் எந்தத் தடையுமில்லை எனவும் தேர்தல் ஆணையாளர் தனது விசேட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## தபால் மூல...

இலங்கையின் 6-வது ஜனாதிபதித் தேர்தலின் தபால் மூல வாக்களிப்பு முடிவுகள் வெளியாகத் தொடங்கியுள்ளன. அதன்படி யாழ். மாவட்டத்தில் 3 ஆயிரத்து 173 வாக்குகள் சரத் பொன்சேகாவுக்கும் மகிந்த ராஜபக்ஷக்கு 892 வாக்குகளும் சிவாஜிலிங்கத்திற்கு 293 வாக்குகளும் கிடைத்துள்ளன.

மொனராகலை மாவட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ-8871 வாக்குகளையும் ஜெனரல் சரத் பொன்சேகா-3795 வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ-9458 வாக்குகளையும் ஜெனரல் சரத் பொன்சேகா 4140 வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

புத்தளம் மாவட்டத்தில் 4988 வாக்குகளை மகிந்த ராஜபக்ஷவும் 2464 வாக்குகளை சரத் பொன்சேகாவும் பெற்றுள்ளனர்.

காலி மாவட்டத்தில் 15640 வாக்குகளை மகிந்த ராஜபக்ஷவும் 7905 வாக்குகளை சரத் பொன்சேகாவும் பெற்றுள்ளனர்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மகிந்த ராஜபக்ஷ 8982 வாக்குகளையும் சரத் பொன்சேகா 3679 வாக்குகளையும் பெற்றுள்ளனர். திருகோணமலை மாவட்டத்தில் மகிந்த ராஜபக்ஷ 6882 வாக்குகளும் சரத் பொன்சேகா 3798 வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

மாத்தறை மாவட்டத்தில் மகிந்த ராஜபக்ஷ 10425 வாக்குகளையும் சரத் பொன்சேகா 5169 வாக்குகளையும்;

மாத்தளை மாவட்டத்தில் மகிந்த ராஜபக்ஷ 8846 வாக்குகளையும் சரத் பொன்சேகா 4038 வாக்குகளையும் பெற்றுள்ளனர். பதுளை மாவட்டத்தில் மகிந்த ராஜபக்ஷ 14998 வாக்குகளையும் சரத் பொன்சேகா 8056 வாக்குகளையும்;

மட்டக்களப்பு மாவட்டத்தில் சரத் பொன்சேகா 3637 வாக்குகளையும் மகிந்த ராஜபக்ஷ 1491 வாக்குகளையும் பெற்றுள்ளனர். (ச-5)

## யாழில்...

பிரிகேடியர் உதயநாயக்கார உறுதிப்படுத்தியுள்ளார்.

எவ்வாறெனினும் இத் தாக்குதல் சம்பவத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. தாக்குதல் சம்பவத்தை அடுத்து குறித்த பிரதேசங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸார் சம்பவ இடங்களுக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். (ச-5)

## பொன்சேகாவுக்கு எதிராக...

மேலும் தெரிவிக்கையில், எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகா நேற்று நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்றாலென்ன தோல்வியடைந்தால் என்ன அவருக்கு எதிராக அரசு சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளது.

தேர்தலில் வாக்களிக்காத ஒருவர் ஜனாதிபதியாக வர முடியாது. அதேவேளை அவ்வாறான வேட்பாளர் தேர்தலில் போட்டியிடவே முடியாது. நான் இதனைக் கூறுவதால் மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் தோல்வியடைந்து விட்டார் என்று அர்த்தமாகாது.

எமது வெற்றியில் எமக்கு முழுமையான நம்பிக்கையுள்ளது. ஆனால் இவ்வாறான வேட்பாளர் ஒருவருக்கு எதிராக அரசு சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளது.

பொன்சேகா வாக்களிக்காதமை பிரச்சினைக்குரிய விடயமல்ல என்று தேர்தல் ஆணையாளர் தனது கருத்தைக் கூறியிருக்கின்றார். ஆனால் இந்த விடயத்தை சட்ட ரீதியாக அணுகும்போது அது பொன்சேகா செய்த பிழையாகவே பார்க்கவேண்டியுள்ளது.

அதனையே நீதிமன்றத்தினூடாக நாம் நிரூபிக்கவுள்ளோம் என்று கூறினார். இதே வேளை சரத் பொன்சேகாவின் ஆதரவாளரும் முன்னாள் நீதியரசருமான சரத் என் சில்வா இதுபற்றி கருத்துத் தெரிவிக்கையில்,

பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவைத் தாக்கல் செய்யும்போது அதனை தேர்தல் ஆணையாளர் ஏற்றுக் கொண்டதன் மூலம் பொன்சேகாவுக்கான தேர்தலில் போட்டியிடும் உரிமை இலங்கை சட்டங்களின் கீழ் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது.

இதற்குப் பின்னர் இந்த விடயத்தில் சர்ச்சைப்பட்டுக் கொள்ள வேண்டிய எந்தத் தேவையும் இல்லை என்று கூறியுள்ளார். (ச-5)

## யாழ்ப்பாணத்தில் 23 வீத வாக்குப் பதிவு...

இலட்சத்து 50 ஆயிரம் அதிகாரிகள் இந்தப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வாக்கெடுப்பில் 70 வீதமான வாக்காளர் கலந்து கொண்டுள்ளதாக தேர்தல் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். கிளிநொச்சியில் மிகவும் குறைந்தளவு வாக்குகளே பதிவாகியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பகல் வேளை வரையில் கிளிநொச்சியில் எவரும் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை எனக் குறிப்பிடப்படுகின்றது.

போக்குவரத்து உபகரண வசதிகளுக்கு ஏற்பட்ட சிக்கல் நிலைமை காரணமாக இவ்வாறு வாக்களிப்பில் கலந்து கொள்ள முடியாத சூழ்நிலை உருவானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 23 வீதமான வாக்குகள் பதிவு செய்யப்பட்டதாகவும் வன்னி மற்றும் கிழக்குப் பகுதிகளில் 40 வீதமான வாக்குகள் பதிவு செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது.

*மாவட்ட ரீதியான தேர்தல் வாக்களிப்பு*

இலங்கையின் 6-வது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்களிப்புக்கள் நேற்று நடைபெற்று முடிந்துள்ள நிலையில் மாவட்ட ரீதியாக அளிக்கப்பட்டுள்ள வாக்கு வீதங்களின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தில் 60 சதவீத வாக்குகளும் மட்டக்களப்பில் 62 வீத வாக்குகள அளிக்கப்பட்டுள்ளன. வவுனியா மாவட்டத்தில் 40 சதவீத வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன.

மன்னாரில் 48 வீத வாக்குகளும் யாழ்ப்பாணத்தில் 23 வீத வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் 4 வீத வாக்குகளும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 10 வீதத்திற்குக் குறைவான வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன.

கேகாலை மாவட்டத்தில் 80 வீதம், களுத்துறை மாவட்டத்தில் 78 வீத வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளன. இரத்தினபுரி மாவட்டத்தில் 75 வீத வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன.

பொலநறுவை, கம்பஹா, மாத்தளை, கண்டி மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் 75 சதவீதமான வாக்குகள் பதிவளிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை கொழும்பு, குருநாகல், அநுராதபுரம், காலி மற்றும்மொனராகலை மாவட்டத்தில் 70 தொடக்கம் 75 சதவீத வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா, புத்தளம், அம்பாறை ஆகிய மாவட்டங்களில் 72 சதவீத வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன. மாத்தறையில் 70 சதவீத வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் நேற்று மதியம் வரை வாக்குப் பதிவுகள் மந்த கதியிலேயே காணப்பட்டது. அதன் பின் ஓரளவு அதிகமாகக் காணப்பட்டது. குண்டுவெடிப்புகள் மற்றும் இனந்தெரியாதோரின் துண்டுப் பிரசுரங்கள் என்பவற்றின் காரணமாகவே மக்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை எனப் பரவலாகப் பேசப்பட்டது. (ச-5)

## சரத்...

பெற்றுக் கொண்டிருக்கும் தேர்தலில் நீங்கள் இருவரும் குழப்பங்களை ஏற்படுத்த முனைகின்றீர்கள்.

இது தொடருமாயின் நான் ஆட்சிக்கு வரும் பட்சத்தில் கடுமையான விளைவுகள் ஏற்படும் என எச்சரித்ததும் கருணாவும் பிள்ளையானும் வாக்குச் சாவடிகளிலிருந்து வெளியேறியதோடு மக்களுக்கு உங்கள் விருப்பம் போலவே வாக்குகளை இட்டுச் செல்லுங்கள் என கூறிச் சென்றனர் எனக் கூறப்படுகின்றது. (ச-5)




அறிவு திறன் ஆரம்பம்

சரஸ்வதி ஆரம்பகல்வி வழிகாட்டி

| | |
|---|---|
| அன்னை- முன்பள்ளி | தளிர்- தரம் 3 |
| அன்னை- தரம் 1 | திறன்- தரம் 4 |
| அன்னை- தரம் 2 | திறன்- தரம் 5 |

முன் மாதிரி வினாத்தாள்
பாட அறிவு
புதிய உலக தகவல்
மற்றும் பல தகவல்களுடன் தரமான வழிகாட்டியாக வெளி வருகின்றது.

*குறிப்பு:- சகல முன்னணி புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். பாடசாலை மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.*

பென்டியம் கலர் (13) பென்டியம் கலர் (25)
பென் ரெக் பேனை- Jolly, Sporty, Bunty, Jolly (Foiled)

இவை அனைத்திற்கும் யாழ். மாவட்ட முகவர்

ஸ்ரீகரன் புக் சென்ரர்

K.K.S. றோட்,
சுன்னாகம்.
T.P.: 021 321 0960

(C-4342)

YOGI'S BEAUTY

(The Academy of Beauty Therapy, Hair Dressing & Home Science)

"YOGI'S இன் நவீன அழகு சிக்ச்சைகள்"

உங்கள் அழகு சம்பந்தப்பட்ட அல்லது முடி சம்பந்தப்பட்ட எந்தக் குறையாக இருந்தாலும் எமது சேவையை நாடுங்கள். சருமங்களுக்கேற்ற வித்தியாசமான நவீன மெசின்களின் உபயோகங்களுடன் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு நிவர்த்தி செய்யப்படுகின்றன.

***மற்றும் உங்கள் திருமண நாளில் நீங்கள் அழகு தேவதைகளாக இருக்க ஆசை உண்டா?***

எமது நவீன ஒப்பனை அலங்காரங்கள் மூலம் புதுமையான சேவையை பெற்றுக் கொள்ளுங்கள்.

புதிய வகுப்புக்கள் 29.01.2010 ஆரம்பமாக உள்ளன.

- ☆ *அழகுக்கலை*
- ☆ *ADVANCED COSMETOLOGY COURSE*
- ☆ *நவீன ஒப்பனையும், தலை அலங்காரங்களும்*
- ☆ *கேக் ஐசிங் மாச்சீனி மலர்கள் (Fondant Structures)*

*சேர விரும்பும் மாணவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.*

**Mrs. YOGINI SHANMUGANATHAN**

*Diploma in:- High tec Aesthetics & cosmetology (India)*
*Diploma in:- Advanced Bridal Make-Up & Character Make- Up (India)*
*Diploma in:- Home Economics (India &Sri Lanka)*

75, அம்மன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 2222796
021 3210077
0777 164923
071 8788814

(C-4340)

யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்

FedEx Express

உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப்பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்

விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை

குறைந்த கட்டணத்திலான உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

திருமுருகன் கொம் ஷெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)



TCN EXPRESS



2B, Nelsan Place, Colombo -06

(C-4344)

வாடிக்கையாளரின் நலன்கருதி
10% - 25 % விசேட கழிவு

லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத பொதிகளிற்கு 1Kg 550/=ரூபா வீதமும். கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 550/= ரூபா வரையான விசேட சலுகை

ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.